பக்கங்கள் 26

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 29 திங்கட்கிழமை 12.05.2025 | அதிர்வு 281



## இறம்பொடை பஸ் விபத்து:

# பலியானோர் எண்ணிக்கை 23 ஆக உயர்வு



நுவரெலியா – கண்டி பிரதான வீதியின் கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இறம்பொடை – கெரண்டி எல்ல பகுதியில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 23 ஆக உயர்வடைந்துள்ளது.

கதிர்காமத்தில் இருந்து நுவரெலியா வழியாக குருநாகல் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே நேற்று அதிகாலை 4:30 மணியளவில் விபத்துக்குள்ளானது.

மேற்படி விபத்தில் 35 இற்கும் அதிகமானோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 03▸

# விபத்தில் தனது குழந்தையை காப்பற்றிய தாய் உயிரிழப்பு!

## அன்னையர் தினத்தில் நாட்டை உலுக்கிய சோகம் மரணிக்கும் தருவாயிலும் தாய்மையின் வெளிப்பாடு





நுவரெலியா மாவட்டம், கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இறம்பொடையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் தனது குழந்தையைப் பாதுகாத்து, அன்னை அன்பின் வலிமையை உலகுக்கு உணர்த்திய தாய், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி தாய், தனது குழந்தையைக் காப்பாற்றும் காட்சி காணொளியாக சமூக ஊடகங்களில் பரவியதால் அநேகர் அந்தத் தாய் மீது அதிகமாகக் கவனம் செலுத்தினர். 03▸




ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கந்தரோடையில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான சித்தார்த்தனின் இல்லத்தில் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். 03▸



# வைத்தியசாலை ஊழியர் வாந்தி எடுத்து உயிரிழப்பு

யாழ். கோப்பாய் வைத்திய சாலையில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாந்தி எடுத்து உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி – பூதர்மட ஒழுங்கை என்ற முகவரியைச் சேர்ந்த குணரத்தினம் குணாதரன் (வயது 41) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் நேற்று வாந்தி எடுத்துள்ளார். இந்நிலையில் உறவினர்கள் அவரைக் கோப்பாய் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதய நோய் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# வவுனியா மேயர் பதவியை நான் கோரவில்லை: தந்தால் முன்மாதியாக நடத்திக் காட்டுவேன்!

## மாநகரசபை உறுப்பினராகத் தெரிவான காண்டீபன் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை மேயர் பதவியை நான் கோரவில்லை. ஜனநாயக முறைப்படி எனக்கு வழங்கினால் முன்மாதிரியாக நடத்திக் காட்டுவேன் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் வவுனியா நகரசபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ள சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் சு.காண்டீபன் மாநகர மேயர் பதவியை கோருகின்றார் என வெளியான செய்தி தொடர்பில் நேற்றுக் கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாநகர சபையின் முதலாம் வட்டாரத்தில் போட்டியிட்ட



நான் அதி கூடிய வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளேன். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் அதி கூடிய வாக்குகளைப் பெற்று வீட்டு சின்னத்தில் வெற்றி பெற்று நகரசபை உறுப்பினராக எனது வட்டாரத்தில் நான் ஆற்றிய பணிக்கான அங்கீகாரமாக மீண்டும் அதி கூடிய வாக்குகளால் சங்கு சின்னத்தில் வெற்றி பெற்றேன்.

தேர்தல் முடிந்த பினபே மேயர், பிரதி மேயர் யார் என தீர்மானிப்பதாக கட்சி தலைவர்கள் மத்தியில் பேசப்பட்டு இருந்தது. அந்தவகையில், அதி கூடிய வாக்குளைப் பெற்று நான் வென்ற நிலையில் என்னை பிரதிநிதித்துவப்படுத்தும் புளொட் அமைப்பும், எனது ஆதரவாளர்களும் எனக்கு மேயர் பதவி வழங்க வேண்டும் எனக் கோருகின்றனர். நான் கோரவில்லை.

ஜனநாயக முறைப்படி எனக்கு மேயர் பதவி தந்தால் நான் அனைத்து உறுப்பினர்களையும் அரவணைத்து இந்த மாநகரத்தை முன்மாதிரியாக நடத்திக் காட்டுவேன். அடுத்த முறையும் சங்கு சின்னத்தில் அதி கூடிய வாக்குளைப் பெற்று வெல்லும் நிலையை உருவாக்குவேன். மக்களின் விருப்பதிற்கு கட்சி தலைமைகள் செயற்பட வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# வெற்றியுடன் தொடரை ஆரம்பித்தது நடப்புச்சம்பியன் ஜொலி கிங்ஸ் அணி

ஜொலி பாஸ் (Jolly Bash) கூடைப் பந்தாட்டத் தொடரில் நேற்று மாலை யாழ். இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்ற போட்டியில் ஜொலி கிங்ஸ் (Jolly Kings) அணி, ஜொலி ரஸ்ரி போய்ஸ் (JOLLY RUSTY BOYS) அணியை 47 : 44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்று தொடரில் தமது முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

மற்றொரு போட்டியில் ஜொலி பல்லெர்ஸ் (Jolly BALLERS) அணி ஜொலி பைட்டர்ஸ் (Jolly FIGHTERS) அணியை வெற்றி பெற்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

தமிழர் பிரதேசங்களில் உள்ள பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது என்று கூறப்பட்டாலும், அதற்கு அப்பாலும் மிக முக்கிய முடிவுகளுக்கான அத்திவாரங்கள் நேற்றைய சந்திப்பில் போடப்பட்டு விட்டன என்று தெரிகிறது.

தமிழர் பிரதேசத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் கட்சிகள் முன்னிலை வகிக்கும் உள்ளூராட்சி சபைகளில் அவ்வாறு முன்னிலை வகிக்கும் தமிழ் கட்சி நிர்வாகத்தையும் தலைமையையும் பொறுப்பேற்பதற்கு மற்றைய தமிழ்க் கட்சிகள் ஆதரவளிப்பது என்று கொள்கை அளவில் இந்தச் சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பெரும்பாலும் தமிழரசுக் கட்சி முன்னிலை வகிக்கும் 35 சபைகளிலும் அக்கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆதரவு வழங்கும்.

இந்த உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் அனைத்துத் தமிழ்த் தரப்பினரினதும் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வதென தமிழரசு கட்சியின் அரசியல் குழு நேற்று முன்தினம் எடுத்த முடிவை நேற்றைய கூட்டத்தில் சுமந்திரன் ஏனையோருக்கு தெளிவுபடுத்தினார். ஆயினும் இந்த சபைகள் தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு இருக்கும் எதிர்பார்ப்புகளை அந்தத் தரப்பு விரைந்து தெரிவித்தால், அவற்றைச் சாதகமாகப் பரிசீலிக்க தமிழரசின் தரப்பில் சுமந்திரன் பச்சைக் கொடி காட்டினார் எனத் தெரிகிறது.

இப்போது உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு அப்பால் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

‘உள்ளூராட்சி சபைகளில் பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொள்வோம், மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஐக்கியமாக எதிர்கொள்வோம்’ என்ற தமது முன்னைய நிலைப்பாட்டை சுமந்திரன் இந்தக் கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தியமையை அடுத்து, இனி வரக்கூடிய மாகாண சபைத் தேர்தலை பொது அணியில் நின்று எதிர்கொள்வதற்கான அடித்தளம் நேற்றைய கூட்டத்தில் போடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அதாவது தலைவர்கள் மட்டத்தில் மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பாக – புது மெருகுடன் – இயங்குவதற்கான பூர்வாங்க இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அதற்கு மேலும் ஒரு விடயம் பேசப்பட்டதாக கூட்டத்தில் பங்கு பற்றிய ஒரு தலைவர் தெரிவித்தார்.

வரும் மாகாண சபை தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சிறிதரன் மாகாண முதல்வர் வேட்பாளராக நிற்பார் என்று தாம் அறிவித்தபோது, அடுத்த நாள் பேட்டியளித்த சிறிதரன் தமக்கு அந்த எண்ணம் இல்லை என்று பகிரங்கப் படுத்தி இருக்கின்றார் என இந்தச் சந்திப்பில் சுமந்திரன் சுட்டிக்காட்டினாராம். அந்தக் காரணத்தின் பின்புலத்தில் தாமே வரும் மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் என சுமந்திரன் நேற்றைய சந்திப்பில் குறிப்பிட்டபோது ‘அது எங்களுக்குத் தெரியும்’ என்ற சாரப்பட சித்தார்த்தனும் செல்வமும் பதிலளித்தனர் எனக் கூறப்பட்டது.

“நீங்கள்தான் முதலமைச்சர் வேட்பாளர் என்று இந்தக் கூட்டத்தில் ஏனையோரிடம் நீங்கள் தெரிவித்தீர்களா?” – என்று சுமந்திரனிடமே தொலைபேசியில் கேட்டேன். அவர் ஆம் என்றும் சொல்லாமல், இல்லை என்றும் மறுக்காமல், நழுவல் பதில் தந்து, அடுத்த விடயத்துக்குப் பாய்ந்து விட்டார்.

எது, எப்படியாயினும் நேற்றைய கூட்டம் இப்போதைய உள்ளூராட்சி சபை நிர்வாகங்களை தமிழரசும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணக்கமாகப் பொறுப்பேற்பதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்தி இருப்பது மாத்திரமன்றி, பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதிய கட்டமைப்பாக – கட்டுறுதியோடு – மீளக் கட்டி எழுப்புவதற்கான அடித்தளத்தையும் போட்டிருக்கின்றது எனத் திருப்திப்படலாம்.

## விபத்தில் தனது...

இறம்பொடை – கெரண்டி எல்ல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவத்தின் போது பலரின் கண்களில் கண்ணீரை வரவழைத்த சம்பவமாக தாய் ஒருவர் தனது குழந்தையைக் காப்பாற்றும் காட்சி பதிவாகியுள்ளது.

பஸ்ஸின் இடிபாடுகளுக்கு மத்தியில் போராடிய அந்தத் தாய்க்கு இனி வலிமை இல்லை என்றாலும், அவள் மரணத்தை எதிர்கொண்ட போதும் அவளுடைய குழந்தைக்கு அரவணைப்பையும் பாதுகாப்பையும் வழங்கும் அளவுக்கு அவளுடைய தாய்மை வலுவாகியுள்ளது.

9 மாதப் பெண் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு அந்தத் தாயும், தந்தையும் இந்த உலகத்தில் இருந்து விடைபெற்றுச் சென்றுள்ளனர்.



## பலியானோர்...

### காயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடம்

காயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சாரதியும் உயிரிழப்பு

இந்த விபத்தில் பஸ் சாரதியும் உயிரிழந்துள்ளார். அவர் பஸ்ஸில் இருந்து பல மணி நேரங்களுக்குப் பின் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

### விசாரணைகள் முன்னெடுப்பு

பஸ் விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்து சாரதியின் கவனயீனத்தால் ஏற்பட்டதா, இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்டதா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகள் கொத்மலை பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.




# மின் கட்டண திருத்தம் முன்மொழிவை முன்வைக்கவுள்ளது மின்சார சபை

மின்கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவை இலங்கை மின்சார சபை எதிர்வரும் வாரம் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கவுள்ளது.

வருடாந்த மின்கட்டண திருத்தத்துக்கு அமைய எதிர்வரும் ஜ/ன் மாதம் மின்கட்டண திருத்தம் தொடர்பில் ஆராயப்படும். இம்முறை மின்கட்டணம் குறைந்த சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மின்னுற்பத்திக்கு செலவாகும் தொகை மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மின் கட்டணம் தீர்மானிக்கப்பட வேண்டும். ஆகவே மின்கட்டணம் தொடர்பில் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் மின்கட்டண திருத்த நிர்ணய முறைமையை அமுல்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஐந்தாம் தவணை விடுவிப்புக்கு மின்கட்டண திருத்த நிர்ணய முறைமை சிறந்த முறையில் தயாரிக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

மின்சார சபையால் முன்வைக்கப்படும் மின்கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஆராய்ந்ததன் பின்னர், மின் கட்டணம் திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் தமது யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு காலவகாசம் வழங்கப்படும்.



# முட்டையின் விலை வீழ்ச்சி

சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, பல பகுதிகளில் முட்டையின் விலை 20 ரூபா முதல் 24 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிது காலத்திற்குப் பிறகு முட்டையின் விலை இந்த அளவுக்கு குறைவடைந்துள்ளதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது பற்றி உத்தியோகபூர்வமாக எந்தத் தரப்பும் பேசவில்லை

## இப்படி டக்ளஸ் கூறுகின்றார்



உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்தவொரு தரப்பும் பேச்சுக்களை முன்னெடுக்கவில்லை என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் எமது கட்சி ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு ஆகிய சபைகளில் முதன்மை நிலையில் உள்ளது. அதனை விடவும் ஏனைய சபைகளிலும் எமது கட்சி தீர்மானிக்கத்தக்க ஆசனங்களைக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் நாம் எப்போதுமே நடைமுறைச் சாத்தியமான விடயங்களை ஏற்றுக்கொள்கின்ற, பேசுகின்ற, சிந்திக்கின்ற தரப்புக்களுடன் கைகோர்ப்பதற்குத் தயங்குவதில்லை.

அந்தவகையில் உள்ளூராட்சி சபைகளில் நாம் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய தரப்புக்களுடன் கூட்டிணைந்து செயற்படுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

எனினும், தேர்தல் நிறைவடைந்து இதுவரையில் எந்தவொரு தரப்பினரும் உத்தியோகபூர்வமாக எம்முடன் பேச்சுக்களை நடத்தவில்லை.

உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களில் தமிழ்க் கட்சிகளும், தேசியக் கட்சியும் ஈடுபடுகின்றன. எனினும், எமது கட்சிக்குள் நாம் தொடர்ச்சியாக எமக்கு விடுக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

உத்தியோகபூர்வமான அழைப்புக்கள் அல்லது கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றபோது இறுதி முடிவை அறிவிப்போம்.” – என்றார்.

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்: அரசுக்கு ஒரு சிவப்பு எச்சரிக்கை!

## குமார் குணரத்தினம் சுட்டிக்காட்டு

”உள்ளூராட்சி சபைத் தேர்தல் பெறுபேறுகள் மூலம் மக்கள் அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். அதனால் மக்களின் எச்சரிகையைப் புரிந்துகொண்டு அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வர வேண்டும்.”

– இவ்வாறு முன்னிலை சோஷலிசக் கட்சியின் செயலாளர் குமார் குணரத்தினம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

“உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு நாட்டு மக்கள் சிவப்பு எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றனர். இந்தத் தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் எதுவும் இடம்பெறப்போவதில்லை. அதனால் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசின் நடவடிக்கை தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை ஒன்றை மக்கள் வழங்க வேண்டும் என்றே போராட்ட அணியாகத் தெரிவித்து வந்தோம். தேர்தல் பெறுபேறுகளைப் பார்க்கும்போது மக்கள் எமது கோரிக்கைக்கு ஓரளவு செவிசாய்த்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அரசு கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் தெரிவித்த விடயங்களை மறந்து புதிய தாராளவாத கொள்கையில்




வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. மக்கள் எதிர்கொண்டுள்ள வரிச் சுமையைக் குறைப்பதாகத் தெரிவித்த வாக்குறுதியை மறந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை மேலும் அதிகரித்துள்ளது.

பாடசாலை உபகரணங்கள் மற்றும் சுகாதார உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரி ஒரு சதமேனும் குறையவில்லை.

மக்கள் விராதேமாக நாட்டின் பொருளாதாரச் சுதந்திரத்தை இந்தியாவுக்குக் காட்டிக்கொடுக்கும் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கின்றது. அந்த ஒப்பந்தங்களை இதுவரை நாட்டுக்கு வெளிப்படுத்தவில்லை.

இவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் கடுமையாக எதிர்த்து வந்த அரச அடக்குமுறையை இன்று போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து வருகின்றனர். இவ்வாறான நிலைமையிலே இந்தத் தேர்தல் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி சகோதரர்கள் தேர்தல்மேடைகளில்கடந்தஅரசுகளுக்கு எதிராக மேற்கொண்டுவந்த கடும் எதிர்ப்பு மற்றும் அரசியல் விமர்சனத்துடனே மக்கள் அவர்களின் பால் அணி திரண்டனர். என்றாலும் இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பெறுபேறுகளைப் பார்க்கும்போது அரசின் மீது இருந்த நம்பிக்கை இல்லாமல் போய் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளைவிட இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 23 இலட்சம் வாக்குகள் குறைவடைந்துள்ளது.

எனவே, இந்தத் தேர்தல் பெறுபேறு மூலம் மக்கள் வழங்கிய எச்சரிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு காரணங்களைத்தெரிவித்துஅரசுமக்களின்எச்சரிக்கையைத் தட்டிக்கழிக்க முற்பட்டால் அதன் பாதிப்பு அரசுக்கே ஏற்படும். ரணில் விக்கிரமசிங்க செயற்படுத்திய மக்களை அழுத்தத்துக்கு ஆளாக்கும் நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையே அரசு முன்னெடுத்துச் செல்வதால், அரசின் மீது மக்களுக்கு விரக்தி ஏற்படுள்ளது.

அதனால் நாட்டு மக்கள் வழங்கிய எச்சரிக்கையைப் புரிந்துகொண்டு, அவர்கள் வேகமாகப் பயணிக்கும் புதிய தாராளவாத வேலைத்திட்டத்தை மாற்றியமைக்க அரசுக்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கின்றது. தீர்மானம் எடுக்கும்போது பொதுமக்களின் பால் இருந்து தீர்மானங்களை எடுப்பதற்கு தற்போதும் அரசுக்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கஜேந்திர தந்திரம்

உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. பௌத்த, சிங்களப் பேரினவாதத்திடம் தமிழ்த் தேசியத்தை தமிழ் மக்கள் நிரந்தரமாகவே அடகு வைத்து விடுவார்களோ என்ற பயத்தை இந்தத் தேர்தல் வாக்களிப்பின் மூலம் தமிழ் மக்கள் நீக்கிவிட்டார்கள். அது ஆறுதலான விடயம்.

ஆனால் தமிழர்களின் இந்தத் தேர்தல் வெற்றிக்கு யார் காரணம் என்பது குறித்துப் பலரும் பலவிதமாகத் தெரிவிக்கும் கருத்துக்கள் மயக்கத்தை தருகின்றன.

தமிழர் தாயகத்தில் முன்னிலை என்னவோ தமிழரசுக் கட்சிக்குத்தான். பொது தேர்தல் பின்னடைவுக்கு பின்னர் அக்கட்சி தன்னைத் தூக்கி நிறுத்தி இருக்கின்றது. ஆனால் அந்தக் கட்சிக்கு கிடைத்த ஆதரவுக்கு பிற தரப்பினர் கூறும் காரணங்கள்தான் மயக்கத்தை ஏற்படுத்துகின்றன.

தமிழரசுக்கு அடுத்து வடக்கில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸையும் உள்ளடக்கிய தமிழ் தேசியப் பேரவை குறிப்பிடத்தக்க முன்னிலையை பெற்றிருக்கின்றது. அது மெச்சத் தக்கதுதான்.

ஆனால் தமிழரசு மற்றும் தமிழ் தேசிய பேரவையின் வெற்றிக்கு பிற தரப்புகள் காரணம் எனக் கூறும் விடயம்தான் வேடிக்கையானது.

தாம் ஆதரித்தமையால் தமிழ் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியது என்று வைத்தியர் அர்ஜூனா கூறுகின்றார்.

வடக்கில் ஆளும் தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடித்து, தமிழரசு முன்னிலை பெற்று இருக்கின்றது.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தோல்விக்கு தத்துவார்த்த ரீதியாகக் கருத்துக்களைச் சொன்னவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தான், அவருடைய ஆழமான கருத்து உருவாக்கமே தேசிய மக்கள் சக்திக்கு எதிராக வாக்களிக்க கூடிய வகையில் தமிழ் மக்களை திசை திருப்பியது, அந்த ஆழமான செயற்பாடுகள் ஏனைய கட்சிகளுக்கும் வாய்ப்பைக் கொடுத்தன என சிங்களத் தலைவர்கள் தம்மைப் பாராட்டுகின்றார்கள் என்று கஜேந்திரகுமார் கூறுகிறார்.

அதாவது தேசிய மக்கள் சக்தியை தமிழர் தாயகத்தில் தமிழரசு தோற்கடித்ததற்கு காங்கிரஸ் கட்சியின் கஜேந்திரகுமார் செய்த பிரசாரம் தான் காரணம் என்று சிங்களத் தலைவர்களைக் காட்டி தமக்குத் தாமே சான்றிதழ் தர முற்படுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இது அவரது பாட்டன் வழிவந்த குயுக்தித்தனம்.

இந்த உள்ளாட்சித் தேர்தலில் வட்டார உறுப்பினர்களின் வெற்றிக்கு விகிதாசார பட்டியலில் இருந்த வேட்பாளர்களும் காரணம், ஆகவே அவர்களுக்கும் சுழற்சி முறையில் சபைகளில் அங்கத்துவ வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று ஒரு தத்துவத்தை அவிழ்த்துவிட்டு இருக்கிறார் கஜேந்திரகுமார்.

வாஸ்தவம்தான். உண்மைதான். மறுக்க முடியாததுதான். ஆனால், இது அவர் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கும் பொருத்தமானது. அவருக்கு அந்த எம்.பி. பதவி கிடைப்பதற்கு கஜேந்திரன், சுகாஷ் போன்றவர்கள் பெற்றுக் கொடுத்த வாக்குகளும் முக்கியமானவை. இதற்கு முந்திய பொதுத் தேர்தலில் அவர் அளவுக்கு கட்சிக்கு வாக்கெடுத்து கொடுத்தவர் இளைஞரான மணிவண்ணன். இப்போது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு கூறும் சுழற்சி முறையை அவர் நாடாளுமன்ற எம்.பிக்கள் விடயத்திலும் பேணுவார் என்று உறுதியளித்திருந்தால் மணிவண்ணன் போன்றோர் அவரை விட்டுப் பிரிந்து போயிருக்க மாட்டார்கள். இப்போதும் கூட உள்ளூராட்சி சபைகளுக்கு இந்த சுழற்சி முறையை அறிவிக்கும் கஜேந்திரகுமார் அதை நாடாளுமன்றத்தில் தாமும் பேணி சுகாஷ் போன்றவர்களுக்கும் அந்த வாய்ப்பை அளிப்பார் என்று சேர்த்து அறிவித்திருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும்.

தனக்கு தனக்கு என்றால் மட்டும் சுளகு படக்கு படக்கு என்று அடிக்கக் கூடாது. நாடாளுமன்றத் தேர்தலில் தமது வெற்றிக்கு காரணமாக இருந்த மற்றைய வேட்பாளர்களுக்கும் கஜேந்திரகுமார் சுழற்சி முறையில் இடம் அளிப்பார் என நம்புவோமாக..!

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

18

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



ரவி ஜெயவர்த்தனா

ஜே.வி.பி. தலைவர்கள் 1971 பீற்றிய மாதிரியோ, அன்றில் 1986 நேரங்களில் அறிவித்த மாதிரியோ, 1971 இல் இராணுவத்தில் நாற்பது வீதமானோர் அவர்களின் அங்கத்தவர்களாகவும், 1986 காலங்களில் படைகளில் எழுபது வீதமானோர் அவர்களின் அங்கத்தவர்களாகவும் இருக்கவில்லை. 1971 காலங்களில் இலங்கையின் இராணுவப் படைகள் சிறிய அளவிலேயே இருந்தன. அப்பொழுது பாதுகாப்புப்படைகளை ஊடுருவதற்கான விவகாரங்களை லொக்கு அத்துலவின் மேற்பார்வையில் பொடி அத்துலதான் கவனித்துக் கொண்டிருந்தார். பின் அது உயங்கொடவினால் பொறுப்பேற்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு காலங்களில் படைகளுக்குப் பெருமளவில் ஆள்சேர்ப்பு இருந்தமையால் ஜே.வி.பி. கணிசமான அங்கத்தினரையும் ஆதரவாளர்களையும் சேர்த்து ஊடுருவக் கூடியதாக இருந்தது. ஆனால், அது எழுபது வீதத்தை எட்டவில்லை. 1971 கிளர்ச்சி அடக்கப்பட்ட பின் நடந்த உள்ளக விசாரணைகளில் ஜே.வி.பியுடன் தொடர்புகளில் இருந்தவர்கள் என அறியப்பட்ட சிலர் படைகளில் இருந்து நீக்கப்பட, அவர்களில் பலர் ஜே.வி.பியுடன் முழு நேர ஊழியர்களாக இயங்கினர். முன்னர் மருதானை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய ஈஸ்வரகே ஆரியசேனா, அவர்களின் மத்திய குழு உறுப்பினராகவும், அதேபோல் இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்ட கப்டன் குலரட்னவும் மத்திய குழுவில் இருந்து பின் கருத்து வேற்றுமைகளால் வெளியேறினார். அவர்களில் வின்சென்ட் சமரசேகர, விஜய வீரவின் நம்பிக்கை கொண்ட நண்பனாகக் கடைசி வரைக்கும் இருந்தார்.

ஆனால் அவர்களுக்காக ஊடுருவிய அங்கத்தினர் குறிப்பிடக் கூடியவர்கள் எனினும், ஜே.வி.பி. 1971 இலும், பின் 1988 – 1989 காலங்களிலும் இராணுவ முகாம்களை செயலிழக்கச் செய்து, அவற்றைக் கைப்பற்றி, ஆயுதங்களை கொள்ளையிட தீட்டிய திட்டங்கள் அலிபாபா கதைகள் போன்றவை. 1971 இல் ஜே.வி.பி. தாக்குதல் திட்டத்தின் ஒரு பகுதியாக, தாக்குதல் நடக்கவிருந்த முதலிரவு "ஜப்பாலா" என்ற விதைகளை அரைத்து, மயக்க மருந்து மாத்திரைகளுடன் முகாமின் படையினருக்கு அவர்கள் அங்கத்தினர்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



சாந்த பண்டார

தொடர்ச்சி▲

கொடுத்து, அந்தப் படையினரை வலுவிழக்க செய்ய வேண்டும். ஜப்பாலா விதைகளை அரைத்தால் கோப்பிப் பவுடர் போன்று இருக்கும். அதைக் கோப்பி, தேநீரில் சேர்த்துக் குடித்தால் நன்றாக வயிற்றோட்டம் இருப்பதால் சிங்கள ஆயுர்வேத வைத்தியர்கள் அந்த நோக்கத்திற்காக இதனைப் பாவிப்பது சகஜம். ஆனால் என்ன காரணத்தினாலோ இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்பு விசாரணைகளில் இப்படியான திட்டம் ஒன்று இருந்தது தெரிய வந்து, "ஜப்பாலா திட்டம்" என விசாரணைக் கோவைகளில் அது பதியப்பட்டது. இதே ஜப்பாலா திட்டத்தை 1987 இந்திய ஒப்பந்தத்தின் பின் ஜே.வி.பி. செயல்படுத்த விழைந்தாலும் அதுவும் ஒரு சந்தர்ப்ப நோக்காகவே இருந்தது.

ராஜீவ் காந்தி 1987இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்த வேளை கொழும்பில் ஜனாதிபதிமாளிகைக்குஅருகில்இராணுவஅணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டிருந்த தருணத்தில், விஜித்த றோஹண என்ற அணிவகுப்பில் இருந்த சிப்பாய் அவரைத் தனது துப்பாக்கிப் பிடியினால் கழுத்தில் அடித்தமையும், அந்தச் சம்பவம் சர்வதேச ரீதியில் பிரபலம் அடைந்தமையும் வாசகர்கள் அறிவார்கள்.

ஜே.வி.பி. அந்தச்சம்பவத்தைதங்களது அங்கத்தினர்களதும் மக்களினதும் எழுச்சியாகக் கொண்டாடி விஜித்த றோஹணவைப் பாராட்டித் துண்டு பிரசுரங்களும், போஸ்டர்களும் ஒட்டிய போது அதில் "கடற்படையில் இருக்கும் தேசாபிமான அங்கத்தினர்" என்று குறிக்கப்பட்டது. இந்தப் பிரபல்யத்தை வைத்து அவர்கள் தாங்கள் படைகளிலே பல வழிகளில் புகுந்து விட்டார்கள் எனவும், இராணுவம் தங்களையும் மக்களின் தேசாபிமானத்துக்காகக் கருத்தறிந்துதான் செயல்பட வேண்டும் எனக் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டார்கள். 1987 இல் அவர்களது "ஜப்பாலா திட்டம்" கைவிடப்பட்டதற்கு எதிர்பாராத விதத்தில் அவர்களுக்குப் படைகளில் இருந்து வந்த ஆதரவு தன்மையில் ஜே.வி.பியினர் அவர்களை – படையினரை – பகைக்க விரும்பவில்லை என்று கூறப்பட்டது.

1987 ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த இராணுவம் முகாம்களில் முடங்க வேண்டி இருந்தது. அதனால் இராணுவத்தினர் ஆத்திரமடைந்திருந்தனர். ஆகவே 1987இல் ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி. கொழும்பிலும் தென் பகுதிகளிலும் போராட்டங்களை நடத்திய வேளை அவர்களைக் கட்டுப்படுத்த – அவர்களுக்கு எதிராக பயன்படுத்த – அரசியல்வாதிகள் தீர்மானம் எடுத்தாலும், இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தந்த தகவல்கள் அரசியல்வாதிகளுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தின. ஜே.வி.பி. தங்களது கிளர்ச்சிகளில் ஆயுதங்களைப் பாவித்தாலும், அவர்களுக்கு எதிராகப் போராட இராணுவத்தின் அடி, மத்திய மட்டங்களில் இடையே பெருமளவில் ஆர்வம் இருக்கவில்லை. ஏனெனில் தாங்கள் தமிழ் விடுதலைக் குழுக்களுக்கும் – முக்கியமாக விடுதலைப் புலிகளுக்கு – எதிராகவே போராட இணைந்தவர்கள், தாங்கள் தங்களது இன மக்களுக்கு எதிராக ஆயுதம் தாங்க விரும்பவில்லை என்ற அவர்களது மன ஓட்டங்களை சிரேஷ்ட அதி

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

காரிகள் கவனித்தனர். இந்த எண்ணப் பாங்குகளை ஒட்டி அரசியல்வாதிகளும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கைகளைப் பிசைந்து ஆலோசனைகளில் இருந்த சமயம் ஜே.வி.பி. இன்னுமொரு சந்தர்ப்பவாதக் காரியத்தை செய்து, படையினரைத் தங்கள் பக்கம் சாய்க்க விரும்பி, அவர்களுக்கான துண்டு பிரசுரங்களையும் போஸ்டர்களையும் அனுப்பியது.


"இராணுவத்திலும், பொலிஸ் சேவைகளிலும் இரகசிய உளவுத்துறைகளிலும் இருக்கும் தேசாபிமானிகளே! உங்களுக்கு எதுவித தீங்கும், உபத்திரவங்களும் நாங்கள் தர விரும்பவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் உங்களோடு இந்த தேசத்தில் துரோகிகளுக்கு எதிராகக் கை கொடுப்போம். உங்களது ஆயுதங்களை துரோகிகளுக்கு எதிராக நீட்ட வேண்டும். அவை தேசாபிமானிகளுக்கு எதிராக அல்ல. இந்தத் தாய் நாட்டை நேசிக்கும் படைவீரர்களான உங்களுக்கு உள்ள கடமை, நீங்கள் உங்களைப் போன்ற தேசாபிமானிகளை பாதுகாப்பதே அன்றி, சட்டங்களுக்கு மாறாகப் பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை அல்ல. தேசாபிமானிகளையே நீங்கள் பாதுகாக்க வேண்டும். நீங்கள் அந்த தேசாபிமானிகளுடன் விரைவில் இணைய வேண்டும். இந்த முக்கியமான தருணத்தில் உங்களுடைய புத்திசாலித்தனமான முடிவுகளையும் செயற்பாடுகளையும் எதிர்பார்க்கிறோம். இந்தக் கோரிக்கையை எங்கள் தாய் நாடு, அதன் மக்கள், அவர்களின் குழந்தைகளின் பேரில் முன் வைக்கிறோம்." – என்ற வாசகங்களில் இந்தப் பிரசுரங்களும் போஸ்டர்களும் இருந்தன.



மாலிங்க ஹேர்மன் குணரத்தின

இராணுவப் புரட்சி ஒன்றையே ஜே.வி.பியினர் எதிர்பார்த்தனர். விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர்த் தந்திரங்களை அரசாங்கம் கையாண்ட விதங்கள், வியூகங்கள் அதனால் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் படையினர் முடக்கப்பட்டமை போன்ற அதிருப்திகளில் இருந்து ஒரு புரட்சியை நடத்தவோ அல்லது அதனை

தொடர்ச்சி▼



விஜித்த ஹேரத்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

செய்ய விரும்புவர்களுக்கு ஆதரவு தர வேண்டும் என்றே ஜே.வி.பி. எதிர்பார்த்தது. அவர்களது அங்கத்தினர் ஆயுதப் பயிற்சி பெற்று, நேரடியாகவோ அல்லது துணைப்படையாகவோ புலிகளுக்கு எதிரான யுத்த முனைகளில் இறங்கிப் போரிட ஜே.வி.பி. தயாராகவில்லை. விஜித்த ரோஹண போன்றோர் செய்த சாகசங்களில் குளிர்ந்து, மக்களை உசுப்பேற்றியமைப் போல, படையினரையும் போருக்கு முகம் கொடுத்து, ஈழக் கோரிக்கையாளர்களுடன் நேரடியாக மோத விட்டு, படைப்புலத்தில் இருந்து விலகி, அரசியல்வாதிகளையும் புரட்சி ஒன்றால் படையினர் கவிழ்க்க வேண்டும் என்று தூர நின்று கம்பின் மறுபக்கத்தில் இருந்து உந்துவதான அவர்களின் போக்கு மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர்களது அங்கத்தினர் நேரடியாக துணைப்படையாக தங்களோடு போரில் இணைந்திருப்பார்களாயின் அவர்களது தேசாபிமானத்தையும் படையினர் ஒருவித நேசத்தோடு பார்த்திருக்கலாம்.

கட்சியாக தங்களுக்கு அப்படியான கொள்கை இருக்கவில்லை என்பதை அவர்களுடைய சாந்த பண்டார என்ற தலைவர் பிடிபட்டு விசாரிக்கப்பட்ட காலத்தில் அவர் ஜனாதிபதி ஜே.ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தனவுடன் இருந்த தொடர்புகளிலும் கடிதப் போக்குவரத்திலும் தெளிவு படுத்தினார்.

சாந்த பண்டார 1988 நடுப்பகுதியில் தங்காலையில் பிடிபட்ட போது அவரது முக்கியத்துவத்தால் ஜே.வி.பி. அவரது விடுதலைக்காகவோ அவர் எங்கு தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்கவோ அவரைப் பிடித்த படை அதிகாரிகளுக்கு அந்த நாள்களில் ஒரு கோடி ரூபா லஞ்சம் பேசினாலும், அவர் அதை மேலதிகாரிகளுக்கு தெரிவிக்க, அப்பொழுதுதான் அவர்களுக்கே ஒரு பெரிய புள்ளி சிக்குண்டுள்ளார் எனத் தெரிய வந்தது. பின்னர் தேசிய புலனாய்வுத் தலைமையகத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நாள்களில் ஜே.ஆரின் உத்தரவில் மாலிங்க ஹேர்மன் குணரத்தினவின் ஆதரவில் ரவி ஜெயவர்த்தனாவைச் சந்திக்க ஏற்றுக் கொண்டால் பிணைக்கு இணங்கினார்கள். மாலிங்க ஹேர்மன் குணரத்தின "ஒரு இறைமையான நாடு" என்ற புத்தகத்தின் ஆசிரியர். ஜே.ஆரின் விசுவாசி.

சாந்த பண்டாரவை ரவி ஜெயவர்த்தனா ரமடா ரினையன்ஸ் ஹோட்டலில் பல தடவை பாதுகாப்பு படையினரின் மேற்பார்வையில் சந்தித்த காலங்களில் ரவி ஜெயவர்த்தனா அவருக்கு கூறியது:– "நீயும் நானும் அரசியல்வாதிகளாகச் சந்திக்கவில்லை. சிங்கள மக்கள் ஒன்று சேர்ந்து இயங்காவிட்டால் மிக விரைவில் நாங்கள் இந்தியாவால் அடிமைப்படுத்தப்படுவோம். நீ போரிடுவது, நீங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள், அவர்களுக்கு எங்கள் நாட்டில் இடம் இல்லை என்பதினால்தான். நானும் அதே கொள்கையைக் கொண்டவன். நீங்கள் தேசாபிமானத்தை உதட்டளவில் பேசுவது போல எனக்குப் படுகிறது. இல்லாவிட்டால் நீங்கள் நேரடியாகவே வன்னிக் காட்டுக்குச் சென்று, எப்படி விடுதலைப் புலிகள் அவர்களுக்கு எதிராகப் போராடுகிறார்களோ அப்படிப் போராடுவீர்கள். உண்மையிலேயே நீங்கள் இந்தியாவை எதிர்த்தால், அவர்கள் வெளியேற வேண்டும் என்றால், வன்னிக் காடுகளில் கொலைகள் செய்ய வேண்டுமே ஒழிய, எங்களது மக்களை அல்ல. நான் உங்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் தந்து பயிற்சியும் தருவேன். நாங்கள் சேர்ந்து எதிரிகளுக்கு எதிராகப் போராட வேண்டும்." – என்றார்.

அப்பொழுது சாந்த பண்டார, ரவி ஜெயவர்த்தனாவிடம் அப்படியானால் அரசாங்கம் என்ன செய்கிறது எனக் கேட்டார். அதற்கு ரவி ஜெயவர்த்தனா "எந்த அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு பின்னால் இருக்கிறார்கள்?" எனக் கேட்டு, தான் விஜவீரவுடனும் பேசுவதற்குத் தயார் என்றும், அதற்குத் தேவையான பாதுகாப்புகள் அவருக்கு ஏற்படுத்தித் தருவேன் என நம்பிக்கையூட்ட, பல ஆவணங்களை சாந்த பண்டாரவின் முன்வைத்தார்.

(தொடரும்)




# வட்டாரத்தில் வெற்றி பெற்ற காங்கிரஸ்காரர்கள் பட்டியல் வேட்பாளருக்கு இடமளிக்க வேண்டும்!

## சுழற்சி முறையில் என்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(பிரபாகரன் டிலக்சன்)

வட்டார உறுப்பினர்களின் வெற்றிக்கு விகிதாசாரப் பட்டியலில் உள்ள உறுப்பினர்களும் பங்காற்றியிருக்கிறார்கள். வட்டாரத்தில் வெற்றிபெற்றவர் தொடர்ந்து நான்கு வருடங்களும் உறுப்பினராக இருக்க வேண்டும் என அவர் நினைப்பது தவறு என தமிழ்த் தேசிய பேரவை கருதுகின்றது. வட்டாரத்தில் வெற்றி பெற்ற வேட்பாளருக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த விகிதாசார பட்டியலில் வேட்பாளர்களுக்கும் சுழற்சிமுறையில் வாய்ப்புக்கள் வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய பேரவை சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிகள் வெளிவந்த பிற்பாடு நாடாளுமன்ற அமர்வுகளில் நான் கலந்து கொண்ட போது தெற்கில் சாதிக்கமுடியாத மாபெரும் வெற்றியை வடகிழக்கில் நீங்கள் சாதித்து விட்டீர்கள் என எதிர்க்கட்சியிலிருந்த சிங்களத் தலைவர்கள் என்னை வாழ்த்தினார்கள்.

வடகிழக்கில் மிகப்பெரிய சாதனையை நடத்திருப்பது உண்மை. ஆனால் தமிழ்த் தேசிய பேரவை மாத்திரம் அந்த வெற்றியை கொண்டாடுவது சற்று பொருத்தமல்ல. ஏனெனில் தமிழரசுக் கட்சியே கணிசமான வெற்றியை அடைந்திருக்கிறது என நான் கூறினேன். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தோல்விக்கு தத்துவார்த்த ரீதியாக கருத்துக்களை சொன்னது நீங்கள்தான். உங்களுடைய ஆழமான கருத்துருவாக்கமே தேசிய மக்கள் சக்திக்கு எதிராக வாக்களிக்கக் கூடியவகையில் மக்களை திருப்பியது. அந்த ஆழமான செயற்பாடுகளே ஏனைய கட்சிகளுக்கும் வாய்ப்பைக் கொடுத்தது என என சிங்களத் தலைவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

2009ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலையை நடத்தி மஹிந்த வெற்றி விழாக்களை கொண்டாடினார். அந்தத் தமிழ் இனப் படுகொலைக்கு தத்துவார்த்த ரீதியாக அத்திவாரமிட்டது ஜே.வி.பியினரே. எனவே அவர்களுக்கு தெரிந்த முறையில் பதில் கொடுத்திருக்கின்றோம் என நான் எதிர்க் கட்சியில் உள்ள சிங்களத் தலைவர்களிடம் கூறினேன்.

2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிற்பாடு ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய நிலைப்பாடு கேள்விக்குறியாக மாற்றியமைக்கப்பட்ட சூழலில் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றோம். தமிழ்த் தேசம் எவராலும் அழிக்க முடியாது என்ற செய்தி இந்த தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எங்களுடைய மக்கள் பல சவால்களை தாண்டி தங்களுடைய உறவுகளுக்குகூட வாக்களிக்காமல் தேச உணர்வினை நிலைநாட்டுவதற்காக வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடு இருக்கக்கூடிய கட்சிகளை மாத்திரமே தெரிவு செய்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசம் வழங்கிய ஆணையை வெறுமனே அதிகாரத்திற்குரிய போட்டியாகவும்,சபைகளைக்கைப்பற்றுவதற்கான போட்டியாகவும் மட்டும் தமிழரசுக் கட்சி பார்க்கின்றது.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி 35 சபைகளில் தாங்கள் முன்னிலையில் இருப்பதாகவும் தாங்களே ஆட்சியமைக்க உரித்துடையவர்கள் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆட்சியமைப்பது மாத்திரமே அவர்களுடைய சிந்தனையாக உள்ளது.

தமிழரசுக் கட்சி வெறுமனே தேர்தலுக்காக மாத்திரமே தமிழ்த் தேசியத்தை கையிலெடுக்கிறது. தேர்தல் முடிந்த அடுத்த நிமிடமே தமிழ்த் தேசியம் அற்று போய்விட்டது. பதவிகளை கைப்பற்றுவதை மட்டுமே சிந்தனையாக கொண்டு செயற்படுகின்றது. இதை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு அறுதிப் பெரும்பான்மையை கொடுக்காமல் தமிழ்த் தேசியத்திற்கான மிகப் பலமான ஆணையை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த செய்தியை தமிழரசுக் கட்சி புரிந்துகொள்ளாது விட்டால் இதுவே அவர்களின் கடைசித் தேர்தலாக அமையும்.

எங்களுடைய நோக்கம் தமிழரசுக் கட்சியை அழிப்பது அல்ல. அனைத்து சபைகளிலும் தமிழ்த் தேசிய பேரவைக்கு மக்கள் தங்களுடைய ஆணையை வழங்கினாலும் தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டி பயணிக்க போவதில்லை என்பதை தேர்தலுக்கு முன்னரே தெளிவாகச் சொல்லியிருந்தோம். ஆனால் தமிழரசுக் கட்சி கொள்கை சார்ந்து சிந்திக்காமல் செயற்படுகின்றது. இவ்வாறு செயற்பட்டால் தொடர்ந்தும் அரசியல் செய்யும் காலம் இருக்காது.

தமிழ் மக்களின் உணர்வுகளை புரியாமல் நடந்து கொள்வதாக இருந்தால் தமிழரசுக் கட்சியினர் தொடர்ந்தும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள். தமிழ்த்தேசம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்களை தியாகம் செய்துள்ளது. அந்த இலட்சியத்திற்கு நேர்மையாக பயணிக்க வேண்டும். மக்களின் உணர்வை சரியாக அறிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் பிரசார மேடைகளில் தமிழ்த் தேசிய பேரவையோடு இணைந்து ஆட்சியமைக்குப் போவதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் தெரிவித்திருந்தார்கள். அதன் பிரகாரம் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினரை நாங்கள் தொடர்புகொண்டு பொது நிலைப்பாட்டின் அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தோம்.

புதிய அரசமைப்பு விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினருக்கும் தமிழ்த் தேசிய பேரவையினருக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுகின்றபோது தமிழரசுக் கட்சிக்கு ஓர் அழுத்தத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நாங்கள் கூறினோம். இது தொடர்பில் ஏனைய பங்காளிக் கட்சித் தலைவர்களோடு கலந்தாலோசித்து விட்டு கூறுவதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் தெரிவித்தனர். ஆனால் இதுவரை எம்மோடு அவர்கள் தொடர்பு கொள்ளவில்லை.

யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய பேரவை சார்பில் 79 உறுப்பினர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள். இந்த வெற்றி இது ஒட்டுமொத்த கூட்டு முயற்சியின் வெற்றியாகும். வட்டார உறுப்பினர்களின் வெற்றிக்கு விகிதாசார பட்டியலில் உள்ள உறுப்பினர்களும் பங்காற்றியிருக்கிறார்கள். வட்டாரத்தில் வெற்றிபெற்றவர் தொடர்ந்து நான்கு வருடங்களும் உறுப்பினராக இருக்க வேண்டும் என அவர் நினைப்பது தவறு என தமிழ்த் தேசிய பரவை கருதுகின்றது. வட்டாரத்தில் வெற்றி பெற்ற வேட்பாளருக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த விகிதாசார பட்டியலில் வேட்பாளர்களுக்கும் சுழற்சிமுறையில் வாய்ப்புக்கள் வழங்க வேண்டும்.

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலும் இத்தகைய சுழற்சி முறையை கையாண்டிருந்தோம். இதனால் ஏனையவர்களும் மக்கள் பிரதிநிதியாக சேவையாற்றக்கூடிய சூழலை உருவாக்கினோம். இது மிகச் சிறந்த அரசியல் கலாச்சாரமாகும்.

வல்வெட்டித்துறை நகரசபையில் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் பங்களிப்பு இல்லாமல் நாம் வெற்றியை அடைந்திருக்க முடியாது. அவர் விகிதாசார பட்டியல் வேட்பாளராக களமிறங்கினார். ஆனால் எமது கட்சிக்கு விகிதாசார ஆசனம் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் அவரை விகிதாசார பிரதிநிதித்துவத்தினூடாக களமிறக்கமுடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனை நாம் ஏற்கமுடியாது.

எனவே இந்த வெற்றிக்காக பாடுபட்டவர்களுக்கு உரிய இடத்தை கொடுக்க வேண்டும். யாழ் மாநகரசபையிலும் எங்களுடைய பல வேட்பாளர்கள் சொற்ப வாக்குகளால் வெற்றியை தவறிவிட்டார்கள். அவர்களை நாம் ஓரங்கட்டமுடியாது.
– என்றார்.




# வடமராட்சிக்குள் மதுபானப் போத்தல்களை கொண்டு வந்ததே தேசிய மக்கள் சக்திதான்!

## அடித்துக் கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

வடமராட்சிக்குள் தேசிய மக்கள் சக்தியினரால் மதுபானப் போத்தல்கள் கொண்டுவரப்பட்டன. இலட்சக்கணக்கில் பணம் கொடுக்கப்பட்டது. முடிந்தால் நீதிமன்றம் செல்லுங்கள். அதையும் சந்திக்க தயார் என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய பேரவை சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் யாழில் வெறும் 27ஆயிரம் வாக்குகளைப் பெற்ற அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத் தேர்தலில் விஸ்வரூபம் எடுத்து 80 ஆயிரம் வாக்குகளை பெற்று, மூன்று ஆசனங்களைக் கைப்பற்றி, எங்களுக்கு தண்ணி காட்டியமை மட்டுமத்தாமல் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் 17 சபைகளையும் கைப்பற்றுவோம் என்று சூளுரைத்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையும், வல்வெட்டித்துறை நகர சபையையும் கைப்பற்றுவதற்காக கடுமையாக வேலை செய்தார்கள். இரவிரவாக எனக்கு எதிராக வேலை செய்யப்பட்டது. சிவாஜிலிங்கத்தை வல்வெட்டித்துறை மண்ணிலிருந்து துடைத்தெறிய வேண்டும் என்று பிரசாரம் செய்தார்கள். எனினும் அதனை எதிர்த்து நாங்கள் போராடினோம்.

தேர்தலுக்கு முதல்நாள் இரவு பொலிஸ் நிலையத்தில் என்னைத் தடுத்து வைத்திருந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. வடமராட்சிக்குள் தேசிய மக்கள் சக்தியினரால் மதுபானப் போத்தல்கள் கொண்டுவரப்பட்டன என்பதை பொலிஸ் நிலையத்தினுள் வைத்தே சொல்லியிருந்தேன். அதனை இந்த மேடையிலும் சொல்கின்றேன். முடிந்தால் நீதிமன்றம் செல்லுங்கள். அதையும் சந்திக்க தயார்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்படுகிறது. தேர்தலுக்கு முதல் நாள் இலட்சக் கணக்கில் பணத்தினை கொண்டு வந்து மக்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது கூறியிருந்தேன்.

உயர் இரத்த அழுத்த பாதிப்பிற்கு மத்தியிலும் மக்களுக்காக களத்தில் நின்று இந்த வெற்றியை பெற்றிருக்கின்றேன். மக்களை சரியாக வழிநடத்தினால் அவர்கள் எங்களுக்கு பின்னால் வருவார்கள்.

இன விடுதலைப் போராட்டத்தில் ஓர் உச்ச வெற்றியை பெறுவதற்காக இந்த தமிழ்த் தேசிய பேரவை தொடர்ந்து குரல்கொடுக்கும். நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற நாசமாப் போன ஆட்சியில் வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை என்ற தீர்மானத்தை நிறைவேற்றவிடாமல் சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் தடுத்தார்கள். வடக்கு மாகாண சபையில் நான் செங்கோலை உடைத்ததன் பிற்பாடே இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2015ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 1/30 உள்நாட்டு பொறிமுறை தீர்மானத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்த்த போது நான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து கொண்டும் அதனை எதிர்த்தேன்.

பதவிகள் வரும் போகும். தோல்வியடைந்தாலும் நாங்கள் மண்டியிடமாட்டோம். சிங்களக்கட்சிகளுடன்சேர்ந்து எங்களுக்கு எதிராக குழிபறித்தாலும் நாங்கள் அஞ்சமாட்டோம். தொடர்ந்தும் இனவிடுதலைக்காக தொடர்ந்து உறுதியோடு போராடுவோம். எங்களை நாங்களே ஆளக்கூடிய தீர்வை வென்றெடுப்பதே ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களுக்கும் ஒன்றரை இலட்சம் அப்பாவி பொதுமக்களுக்கு மான அஞ்சலியாக இருக்கும். என்றார்.




# தமிழ் மக்கள் கூட்டணி நேற்று வவுனியாவில் கலந்துரையாடல்

(கி.வசந்தன்)

நடைபெற்று முடிவடைந்துள்ள உள்ளூராட்சி தேர்தலில் யாரை ஆதரிப்பது மற்றும் அடுத்த கட்ட செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் கலந்துரையாடல் வவுனியாவில் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தமிழழகன் தலைமையில் வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுத்தியில் இந்தக் கலந்துரையாடல் நேற்று மாலை இடம்பெறறது.

இதில் கட்சிக்கு கிடைத்த போனஸ் ஆசனத்தில் பிரதேச சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பிலும் தவிசாளர் தெரிவில் யாரை ஆதரிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், தேர்தலுக்கு பின் கட்சியை வவுனியா மாவட்டத்தில் விரிவாக்கம் செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதல் கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# மாதுரு ஓயாவில் விபத்திற்குள்ளான விமானம் குறித்த கள ஆய்வு ஆரம்பம்

மாதுரு ஓயாவில் வீழ்ந்து விபத்திற்குள்ளான பெல் 212 ரக ஹெலிகொப்டர் கட்டுநாயக்க விமானப்படை பொறியியலாளர் பிரிவில் கையளிக்கப்படவுள்ளது.

அடுத்தகட்ட விசாரணைகளுக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

விமானம் வீழ்ந்து விபத்திற்குள்ளானமை தொடர்பான கள ஆய்வு ஆரம்பமாகியுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

விபத்து தொடர்பில் ஆராய்வதற்காக விமானப்படை தளபதியினால் நியமிக்கப்பட்டுள்ள 09 பேரடங்கிய குழுவினால் கள ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.





# தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாகி வருகிறது

## பிரதமர் மோடி பெருமிதம்

தேசிய தொழில்நுட்ப தினத்தையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில்,

“தேசிய தொழில்நுட்ப தின வாழ்த்துகள்! நமது விஞ்ஞானிகளுக்கு பெருமை சேர்க்கவும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும், 1998 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொக்ரான் சோதனைகளை நினைவுகூரவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. அவை நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையில், குறிப்பாக தன்னம்பிக்கைக்கான நமது தேடலில் ஒரு முக்கிய நிகழ்வாக இருந்தன.

நமது மக்களால் முன்னேறிச் செல்லும் இந்தியாவானது விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் கண்டுபிடிப்பு, பசுமை தொழில்நுட்பம் உட்பட பல தொழில்நுட்பங்களில், பல்வேறு அம்சங்களில் உலகளாவிய முன்னணி நாடாக வளர்ந்து வருகிறது.

அறிவியல் ஆராய்ச்சி மூலம் எதிர்கால சந்ததியினருக்கு அதிகாரம் அளிப்பதற்கான எங்கள் செயல்பாடுகளை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். தொழில்நுட்பம் மனித குலத்தை மேம்படுத்தட்டும். நமது தேசத்தைப் பாதுகாக்கட்டும். எதிர்கால வளர்ச்சியைத் தூண்டட்டும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மோடி தலைமையில் உயர் மட்ட ஆலோசனை

## முப்படை தளபதிகள் பங்கேற்பு


பிரதமர் நரேந்திர மோடி, புதுடில்லியில் உள்ள தனது இல்லத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் முப்படை தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் பாதுகாப்பு படைத் தலைவர் ஜெனரல் அனில் சவுகான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இருதரப்பு மோதலை நிறுத்திக்கொள்வது என இந்தியா – பாகிஸ்தான் இடையே நேற்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இரு நாடுகளின் முப்படைகளும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணி முதல் தாக்குதலை நிறுத்திக் கொள்வதென முடிவு செய்யப்பட்டதாக வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும் இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

மோதலை முடிவுக்குக் கொண்டு வர உதவியதற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், டொனால்ட் ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் பாகிஸ்தான் ஆயுதப் படைகள் ட்ரோன் தாக்குதலை நடத்தின. இதனால், மீண்டும் ஒரு பதற்றச் சூழல் உருவானது.

எனினும், நேற்று காலை முதல் எல்லையோர பகுதிகளில் அமைதி நிலவுகிறது. இதையடுத்து, இராணுவ மோதல் காரணமாக அறிவிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அதிகாரிகள் திரும்பப் பெற்றனர்.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்பு படைத் தலைவர் ஜெனரல் அனில் சவுகான், முப்படை தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# அவசரமாக வீடு திரும்ப வேண்டாம் பாதுகாப்பான இடங்களில் இருங்கள்

## எல்லையோர கிராம மக்களுக்கு காஷ்மீர் பொலிஸ் எச்சரிக்கை

பாகிஸ்தானின் எல்லைதாண்டிய குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக வெளியேற்றப்பட்ட எல்லையோர கிராம மக்கள் வீடுதிரும்ப அவசரப்படவேண்டாம் எனவும் பாதுகாப்பான இடங்களிலேயே இருங்கள் என்றும் ஜம்மு காஷ்மீர் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் வெடிக்காத வெடிகுண்டுகள் ஆராய்ந்து அகற்றப்படாத நிலையில் பொலிஸார் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் குண்டுவீச்சு தாக்குதலால் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு, பாரமுல்லா, பந்திபோரா மற்றும் குப்வாராவில் எல்லையோர பகுதிகளில் உள்ள கிராமங்களில் வசிக்கும் சுமார் 1.25 லட்சம் மக்கள் தங்களின் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் போலிஸார் வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில்,

"முன்னணி கிராமத்தில் வசிப்பவர்கள் அவசரப்பட்டு வீடுதிரும்ப வேண்டாம். பாகிஸ்தானின் குண்டு வீச்சில் வெடிக்காத வெடி குண்டுகள் இன்னும் ஆய்வு செய்யாததால், உயிருக்கு அபாயம் நீடிக்கிறது.

பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் பகுதிகளுக்கு வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் குழு அனுப்பப்பட்டு மக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் வெடிக்காத வெடிகுண்டுகள் ஆய்வு செய்யப்பட்டு அகற்றப்படும். கடந்த 2023 இல் மட்டும் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகில் உள்ள பகுதிகளில் வெடிகுண்டுகளின் மீதங்கள் வெடித்ததில் 41 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்." என்று தெரிவித்துள்ளது.

# ஓவல் மாளிகையில் தனக்கு தானே சிலை வைத்த டொனால்ட் ட்ரம்ப்







அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஓவல் மாளிகையில் தனக்கு தானே சிலை வைத்துள்ளார்.

கடந்த ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது டொனால்ட் ட்ரம்பின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் நூலிழையில் உயிர் தப்பிய ட்ரம்ப், அந்த சம்பவத்தை நினைவுகூறும் வகையில் இவ்வாறு சிலை வைத்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் இந்த புகைப்படத்தை வெள்ளை மாளிகை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.



# புதிய முகமூடியுடன் தொடரும் தமிழருக்கு எதிரான போர்!



ஹரிகரன் ரவீந்திரநாதன்

போரின் முடிவா? அல்லது ஒரு புதிய யுத்தத்தின் தொடக்கமா? – எனக் கருமளவுக்கு 2009 மே 18 என்பது இலங்கையின் ஜனநாயக அரசியலில் இது ஒரு முக்கிய நாளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மக்களின் வாழ்வில் அந்த நாள் முதல் தொடங்கியது ஒரு புதிய பரிதாபத் தொடர். தோல்வியைச் சுமந்த தமிழ் சமூகத்தின் மீது சிங்கள பேரினவாதம் வெற்றி கொண்ட வெறியோடு தன் திட்டங்களை உருவாக்கத் தொடங்கியது. விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனித்து போனாலும், தமிழரின் அடையாளம் மற்றும் உரிமைகள் மீது நடத்தப்படும் வேறொரு சுரண்டல் யுத்தம் தொடாந்தும் நடந்து கொண்டே இருக்கின்றது.

யுத்தத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கையை உலகமே வினவுகிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் மதிப்பீட்டின் படி, போரின் இறுதி 6 மாதங்களில் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். சில மனித உரிமை அமைப்புகள் இந்த எண்ணிக்கை 70,000 வரை இருக்கலாம் எனக் கூறுகின்றன. இத்தனை உயிர்கள், நீதியின்றி அழிந்துவிட்டன. இதுவரை இந்த இழப்புக்களுக்கான விசாரணை கூட நடத்தப்படவில்லை. அவர்களது இழப்புக்கான பரிகார நீதி கூட கிடைக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க, 2020 ஆம் ஆண்டு சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் வெளியிட்ட புள்ளி விபரப்படி, 23,586 தமிழர்கள் காணாமல் போயினர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் பலர் இராணுவத்தின் பொறுப்பில் கடைசியாக கையளிக்கப்பட்டவர்கள். இந்த நவீன காலத்தில் உலகிலேயே அதிக எண்ணிக்கியில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை இலங்கையில் தான் இருக்கின்றது என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல வருடங்களாக வீதியில் இறங்கி நீதி கேட்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் அவர்களுக்கான நீதி கூட மறுக்கப்பட்ட நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட பல தாய்மார் தமது பிளளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே மரணித்துப் போயுமுள்ளனர்.

1979 இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் 2009 இன் பின்னும் தமிழர்கள் மீது வெகுவாகப் பயன்படுத்தப்பட்டது. 2022இல் மட்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை பிரசார அமைப்பின் கூற்றின் படி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 90 வீதமானோர் தமிழர்கள். நீதிமன்ற உத்தரவு இல்லாமல் 18 மாதங்கள் வரை கைது செய்து சிறையில் வைக்க இந்தச் சட்டம் அனுமதிக்கிறது. இது சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறும் ஒரு சட்டம் என்பதை சர்வதேச மன்னிப்புச் சபை நேரடியாகக் கூறுகிறது.

தொடர்ச்சி▼





# புதிய முகமூடியுடன் தொடரும் தமிழருக்கு எதிரான போர்!

தொடர்ச்சி▲

பண்பாட்டு அழிவின் வேர்கள் வடக்கிலும் கிழக்கிலும் போர் முடிந்த பிறகும் தொடர்கின்றன. இராணுவம் 96,000 ஏக்கர் நிலங்களைப் பிடித்து வைத்துள்ளதாக மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் 2024 ஆம் ஆண்டு அறிக்கை கூறுகிறது. இது தமிழர்களின் வாழ்க்கைத் தொழில்கள், விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை முற்றிலும் பாதித்துள்ளது. இதே நேரத்தில், பழைய இந்து கோவில்கள் இருந்த இடங்களில் புதிய பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. 2020-2024 காலப்பகுதியில் மட்டும், வடகிழக்கில் 128 பௌத்த விகாரைகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன. இது ஒரு திட்டமிட்ட பண்பாட்டு அழிவாகப் பார்க்கப்படுகிறது. கடந்த கால அரசாங்கம் மட்டுமன்றி தற்போதைய அநுர அரசாங்கமும் பௌத்தமயமாக்கல் செயற்பாட்டை கைவிட்டதாகத் தெரியவில்லை.

இன்று இலங்கையில் மாற்று அரசியலாக பேசப்படும் ஜனத்தா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மக்கள் இடையே ஊழலற்ற ஆட்சி எனக் கூறி வாக்கு வங்கியை அதிகரித்துள்ளது. ஆனால் அவர்கள் உண்மையான அரசியல் நோக்கம் என்ன? 2022 ஒக்டோபர் மாதத்தில், ஜேவிபி தலைவர் அஉரகுமார திஸாநாயக்க, "ஈழம் பற்றிய பேச்சு தேச விரோதம். ஒரே தேசம், ஒரே தேசியம் வேண்டும்" என்றார். இது, தமிழர்களின் தனித்துவ அடையாளத்தையே நிராகரிக்கும் சிங்கள தேசிய சிந்தனை ஆகும்.

2023 தேர்தல் பிரசார ஆவணங்களில், ஜே.வி.பி. அதாவது தேசிய மக்கள் சக்தி சார்பில், தமிழர் உரிமைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தமிழர் பகுதிகள் பற்றி எந்த ஒரு திட்டமும் இல்லை. ஜனநாயக சமநிலை, அங்கீகாரம், நீதிமன்ற விசாரணை, அரசியல் தண்டனை பற்றிய உள்ளடக்கங்களை முழுமையாக காணமுடியவில்லை. இதனால், ஜே.வி.பி. புதிய மாற்று அரசியல் சக்தியாக இல்லை. அது புதிய முகமொன்றை அணிந்த பழைய சிங்கள பேரின வாதத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

தமிழர்களுக்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. அவர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், காணாமல் போன உறவுகள், நீதியின்றி சிறைவைக்கப்படும் மனிதர்கள், பண்பாட்டு அழிவுகள் அனைத்தும் தொடர்கின்றன. சர்வதேசம் "போர் முடிந்துவிட்டது" என கூறுகின்ற போதும், தமிழர் மீது சட்ட, மொழி, பண்பாடு மற்றும் நிலத்திற்கு எதிரான மறைமுக யுத்தம் ஒரு அமைதியான முகமூடியுடன் நடத்தப்படுகிறது. இந்நிலையில், ஜே.வி.பி. போல மாறுபட்ட பெயரில் புதிய வகை பேரினவாதங்கள் உருவாகின்றன. இவற்றை தோற்கடிக்க, உண்மை தரவுகளைத் தமிழர் தேசம் அறிந்து கொள்ள வேண்டும். அவற்றுடன், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தமிழ் சமூகத்தின் உறுதியான செயற்பாடுகள்தான் எதிர்கால இருப்புக்கு வழிகாட்டும்.





# ரம்படகல்ல வயல்வெளி பிரதேசத்தில நேற்று வான் - மோ.சைக்கிள் விபத்து

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் ஃ கெப்பிடிகல வீதி ரம்படகல்ல வயல்வெளி பிரதேசத்தில பொலிட்டோ வானும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மோதி விபத்துக்குள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமேற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே நேரம் வானின் சாரதிக்கும் காயமேற்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.












# விபத்துக்குள்ளான பஸ் பள்ளத்திலிருந்து மீட்பு



கொத்மலை, ரம்பொட பகுதியில் பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளான பஸ் பள்ளத்திலிருந்து மீட்கப்பட்டு மேலதிக விசாரணைக்காக கொத்மலை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து ஒரு பெரிய கிரேன் உதவியுடன் பஸ்ஸை மீட்டுள்ளனர்.





# விபத்தில் உயிரிழந்தோருக்கு 10 லட்சம் ரூபா இழப்பீடு







கொத்மலை – கெரண்டிஎல்ல பஸ் விபத்தில் உயிரிழந்த நபரொருவருக்கு 10 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி நிதியத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதனடிப்படையில், உயிரிழந்தவரின் உறவினர்களுக்கு இந்த பணத்தை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதவிர, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை மற்றும் காப்புறுதி நிதியத்தின மூலம் இழப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



# மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் மக்களை வாட்டுவதை உடனே நிறுத்துங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தல்

எதிர்வரும் மின்சாரக் கட்டண திருத்தத்தில் 25 வீதம் முதல் 30 வீதம் வரையான அளவில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன், இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை மறுபரிசீலனை செய்வதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, முந்தைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை அப்படியே செயல்படுத்துவதன் விளைவாக இப்படி மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மீளாய்வுக்கு முன் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி நிபந்தனைகளை நிறைவேற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பது இப்போது தெளிவாகிறது.

கடந்த ஆண்டுலாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை பெப்ரவரி மாதம் முதல் நட்டமடைந்து வருவதாகவும், அது எண்ணிக்கையில் ரூபா 271.1 பில்லியன் அளவிற்கு இருப்பதாகவும் கூறி, அன்று மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை கைவிட அரசு தயாராகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ரூபா 9,000 மின்சாரக் கட்டணத்தை ரூபா 6,000 வரையும், ரூபா 3,000 மின்சாரக் கட்டணத்தை ரூபாய் 2,000 வரையும் 33 வீதமாகக் குறைப்பதாக தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, இவ்வாறு நாட்டு மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்குவது ஜனநாயக விரோத செயல் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இதற்கு முன்னரும் தற்போதைய மின்சக்தி அமைச்சர் உட்பட அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது என அறிவித்தபோதும், எதிர்க்கட்சியாக நாங்களும், மின்சார நுகர்வோர் அமைப்புகளும் எழுப்பிய குரலுக்கு பதிலளித்து, பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஜனவரி மாதத்தில் 20 வீத மின்சாரக் கட்டணத்தைக் குறைத்ததையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதன்படி, இம்முறையும் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளோம் என வலியுறுத்துகிறேன். – என்றார்.

**සජිත් ප්‍රේමදාස, (පා.ම.)**
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
**சஜித் பிரேமதாச, (பா.உ)**
**எதிர்க்ட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்**
**Sajith Premadasa, (M.P.)**
Leader of the Opposition – Parliament of Sri Lanka

2025.05.11

**විදුලි ගාස්තු වැඩි කරමින් ජනතාව පීඩාවට පත් කිරීම වහාම නතර කරන්න.**

ඉදිරියට නියමිත විදුලි ගාස්තු සංශෝධනයේදී 25% ත් 30% අතර ප්‍රමාණයකින් විදුලි ගාස්තු වැඩි කිරීමකට රජය දරණ උත්සාහය වහාම නතර කරන ලෙස අප අවධාරණය කර සිටින්නෙමු.

වත්මන් ජනාධිපති අනුර කුමාර දිසානායක මහතා ප්‍රමුඛ රජය බලයට පත්වීමට පෙර මෙරට ණය තිරසරකරණ විශ්ලේෂණය (DSA) යළි සමාලෝචනය කරන බවට ජනතාවට දුන් පොරොන්දුව අමතක කරමින්, පෙර පැවති රජය ජාත්‍යන්තර මූල්‍ය අරමුදල (IMF) සමඟ ඇති කරගත් එකඟතා ඒ ආකාරයෙන්ම ක්‍රියාත්මක කිරීමට යාමේ ප්‍රතිඵල ලෙස මෙලෙස විදුලි ගාස්තු වැඩි කිරීමකට රජය යොමු වීමේ තත්ත්වයක් නිර්මාණය වී තිබේ.

ජාත්‍යන්තර මූල්‍ය අරමුදල සමඟ ජූලි මාසයේ පැවැත්වීමට නියමිත සමාලෝචනයට පෙර විදුලි ගාස්තු වැඩි කරමින් කොන්දේසි සම්පූර්ණ කිරීමේ මෙහෙයුමක රජය නිරතව සිටින බව දැන් මනාව පැහැදිලි වේ.

පසුගිය වසරේ ලාභ ඉපැයූ ලංකා විදුලි බල මණ්ඩලය පෙබරවාරි මාසයේ සිට පාඩු ලබන බවත්, එය සංඛ්‍යාත්මකව රු බිලියන 271.1 පමණ වන බවත් පවසමින් මේ සැරසෙන්නේ එදා ජනතාවට දුන් පොරොන්දු කුණු කූඩයට දැමීමට බව හොඳින්ම පෙනෙන්නට තිබේ.

රු 9000 විදුලි බිල රුපියල් 6000 දක්වාත්, රුපියල් 3000 විදුලි බිල රුපියල් 2000 දක්වාත් 33% අඩු කරන බවට, වත්මන් ජනාධිපතිවරයා මැතිවරණයට පෙර ජනතාවට දුන් පොරොන්දුව අමතක කරමින්, මේ ආකාරයෙන් රටේ ජනතාව පීඩාවට පත් කිරීම ප්‍රජාතන්ත්‍ර විරෝධී ක්‍රියාවක් බව අප අවධාරණය කර සිටින්නෙමු.

මීට පෙරද වත්මන් විදුලි බල අමාත්‍යවරයා ප්‍රමුඛ රජය විදුලි ගාස්තු අඩු කිරීමේ හැකියාවක් නොමැති බව ප්‍රකාශ කරද්දීත්, විපක්ෂය ලෙස අපත්, විදුලි පාරිභෝගික සංවිධානත් නැඟූ හඬට ප්‍රතිචාර දක්වමින් මහජන උපයෝගීතා කොමිසම ජනවාරි මාසයේදී 20% කින් විදුලි ගාස්තු අඩු කිරීමට කටයුතු කළ ආකාරයද සිහිපත් කරනු කැමැත්තෙමි.

ඒ අනුව මෙවරත් විදුලි ගාස්තු වැඩි කිරීමකට එරෙහිව සියල්ලන් පෙළ ගස්වමින් මේ රටේ විදුලි පාරිභෝගිකයින්ගේ අයිතිය සුරක්ෂිත කිරීමට කැපවන බව අවධාරණය කර සිටිමි.

**සජිත් ප්‍රේමදාස,**
ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ විපක්ෂ නායක.

අංක 30, ශ්‍රීමත් මාකස් ප්‍රනාන්දු මාවත, කොළඹ 07.
இலக்கம் 30, சேர் மாக்கஸ் பெர்ணாந்து மாவத்தை, கொழும்பு 07.
No. 30, Sir Marcus Fernando Mawatha, Colombo 07.

දුරකතන / தொலைபேசி / Telephones: 011 2699171, 011 2699204
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2699174
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E – mail: sajith_p@dialogsl.net, oppositionleader.sp@gmail.com




# மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்திற்கு நீதிகோரி தலவாக்கலையில் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்துக்கு நீதிக்கோரியும் பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

தலவாக்கலை தோட்ட பெற்றோர்கள், மாணவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பெண்கள் இணைந்து இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்று மாலை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஊர்வலமாக தலவாக்கலை ட்றூப் வீதி வழியாக தலவாக்கலை பஸ் நிலையத்தை வந்தடைந்தது. அங்கு ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கம் பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும், உயிரிழந்த மாணவி டில்ஷி அம்ஷிகா தனது உயிரை மாய்த்துக் கொள்வதற்கு காரணமாக இருந்த அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும், மாணவியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.














# சித்தர்கள் பார்வையில் சித்திரா பௌர்ணமி!

## (இன்று (12) திங்கட்கிழமை சித்ரா பௌர்ணமி தினமாகும்)



வித்தகர் விபுலமாமணி
வி.ரி. சகாதேவராஜா,
காரைதீவு நிருபர்.



சித்திரா பௌர்ணமி அன்று சித்திர குப்தன் பிறந்த நாள் ஆகும். உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் துறவறம் பூண்ட தினம்.

தாய்மார்களுக்கு பிதிர்க்கடன் செலுத்தும் தினம் என்றெல்லாம் கூறுவார்கள்.

ஆனால் சித்தர்கள் பார்வையில் சித்திரா பௌர்ணமி எவ்வாறு இருக்கிறது என்பதை இங்கு பார்க்கலாம்.

நம்முடைய மரபில் ஆதியில் இந்த நாள் "சித்தர் பௌர்ணமி" என்றே அழைக்கப்பட்டது. பின்னாளில் மருவி சித்திரா பௌர்ணமியானது என காகபுஜண்டர் தலையாட்டி சித்தர் அடிக்கடி கூறுவார் என்று சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ கூறுகிறார்.

இந்த சித்திரா பௌர்ணமியன்று தான் இறையருளை வழங்குவதற்காக சித்தர்கள் பல்வேறு வடிவங்கள் எடுத்து பூமிக்கு வருவதாக கோரக்கர் தனது "மலை வாடகம்" நூலில் கூறுகிறார்.

ஒவ்வொரு சித்திரா பௌர்ணமியிலும் இன்றுவரை இலங்கையில் சித்தர்களின் ஆதி இருப்பிடம் வேலோடு மலையில் இரவு முழுவதும் பதினெண் சித்தர்கள் சன்னிதியில் இன்றுவரை மாபெரும் சித்தர்கள் வழிபாடு, அபூர்வ காயகல்ப மூலிகைகளால் அற்புதமான வேள்விகள் நடைபெறுகின்றன.

நிலவின் ஒளிக்கு சில அபூர்வ ஆற்றல்கள் உண்டு. பயிர், செடி, கொடி, மூலிகைகள் செழிப்பாக வளர்வதற்கு தேவையான சக்தியை அது தரும். நிலவொளி நம் மீது பட்டால் அறிவு பலப்படும். மனக்குழப்பம் நீங்கும். மற்றைய நாளை விட தெய்வீக சக்தி மிக்க மலைகளுக்கு சித்திரா பௌர்ணமியில் சக்தி அதிகரிக்கும்.

பௌர்ணமியன்று தெய்வ அருள், மூலிகைக் காற்றால் உடல்நலம், நிலவொளியால் மனத்தெளிவு உண்டாகிறது. அன்றைய தினம் புனித மலைகளுக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தப்படி அமைதியாக வந்தால் பலன் இரட்டிப்பாகும்.

குறிப்பாக சித்தர்களின் அருளை நாம் தியானத்தால் அல்லது ஆழ்ந்த தவத்தால் பெற முடியும். சித்திரா பௌர்ணமி வழிபாட்டின் மிக முக்கிய அம்சமாக சித்தர்களின் அருளை பெறுவது முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

நமக்கு மட்டுமல்ல சித்தர்களுக்கும் சித்திரா பௌர்ணமி முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். பொதுவாக சித்ரா பௌர்ணமி தினத்தன்று பூமியில் இருந்து ஒருவித உப்பு கிளம்பும். அந்த உப்புக்கு பூமிநாதன் (பூநீறு) என்று பெயர். இந்த உப்பு அதிக சக்தி தரக்கூடியதாகும். இதை சித்தர்கள்தான் கண்டு பிடித்து உலகத்துக்கு தெரிவித்தனர்.

சித்திரா பௌர்ணமி தினத்தன்று அந்த உப்பின் சக்தியை பெறுவதற்காகவே சித்தர்கள் பல இடங்களில் தோன்றுவது உண்டு. மேலும் பல முக்கிய தலங்களில் உள்ள இறைமூர்த்தங்களை வழிபடுவதற்காக சித்தர்களும் வருவார்கள். அந்த வகையில் நம்பிமலை, கொல்லி மலை, பொதிகை மலை, தீர்த்த மலை, திருவண்ணாமலை, சதுரகிரி மலை, இலங்கையில் கதிர்காமம், கபிலவத்தை, வேலோடு மலை உள்பட பல்வேறு மலைகளில் சித்தர்களும் வலம் வருவார்கள்.

இறைவனின் அருளை பெறுவதற்காக சித்தர்கள் பல்வேறு வடிவங்கள் எடுத்து வருவதாக நம்பப்படுகிறது. வண்ணத்துப்பூச்சியாக, நாகங்களாக ஏதோ விலங்காக அல்லது மனிதர்கள் போலவே சித்தர்கள் வலம் வருவார்கள். அந்த சமயத்தில் நாமும் சென்றால் நமக்கு இறையருளும் சித்தர்களின் அருள் ஆசியும் கிடைக்கும்.

எனவேதான் கிரிவல தலங்களில் உள்ள சித்தர்களின் ஜீவ சமாதியை சித்ரா பவுர்ணமி தினத்தன்று தவறாமல் வழிபட வேண்டும் என்று நமது மூதாதையர்கள் அறிவுறுத்தி உள்ளனர். சித்தமலைகளில் ஏற்கனவே நிறைய சித்தர்களின் அருள் உள்ளது. சித்திரா பௌர்ணமி தினத்தன்று மற்ற இடங்களில் உள்ள சித்தர்களும் நம்பிமலைக்கு வந்து பூதநாராயண சித்தர் தலைமையில் ஒன்று கூடி உலக மாற்றங்களை பற்றி முடிவெடுப்பார்கள் என்று கோரக்கர் மலை வாடகம் என்ற நூலில் கோரக்கர் பெருமான் சொல்கிறார். ஆகையால் செல்பவர்கள் ஈசன் பெயருடன் சித்தர்களையும் நினைத்து வழிபட்டால் நன்மைகள் உண்டாகும்.

பொதிகை மலையில் அகத்தியரை சித்திரா பௌர்ணமி தினம் வழிபட்டால் சிவபெருமானின் திருவடியை மிக எளிதாக சென்றடைய முடியும் என்பார்கள். அதுபோல மதுரையில் ஒவ்வொரு சித்திரா பௌர்ணமி தினத்தன்றும் இந்திரனே நேரில் வந்து சொக்கநாதரை பூஜித்து வழிபடுவதாக சொல்வார்கள். அந்த சமயத்தில் மதுரை சொக்கநாதரை நாமும் வழிபட்டால் இந்திரனின் அருள்ஆசி பெற முடியும்.

சித்திரா பௌர்ணமி தினத்தன்று சித்திரை நட்சத்திரமும், பவுர்ணமி திதியும் சேர்வதால் கடலில் நீராடுவது மிகவும் நல்லது என்று நம் முன்னோர்கள் கணித்து உள்ளனர். கடலில் நீராடினால் இதுவரை சம்பாதித்த பாவங்கள் அனைத்தையும் கரைத்து விடலாம் என்பது ஐதீகம். அன்றைய தினம் கடலில் புனித நீராட வருபவர்களுக்காக சித்தர்கள், ரிஷிகள் தயாராக காத்து இருப்பார்கள் என புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கடலில் புனித நீராடினால் சித்தர்களின் ஆசி பரிபூரண மாக நமக்கு கிடைக்கும். அன்றைய தினம் "மூலிகை குளியல்" செய்வதால் அனைத்து வித தோஷங்களில் இருந்தும் விடுதலை பெறுவதாக போகர் சொல்கிறார்.

தஞ்சை பெரிய கோவிலில் பௌர்ணமி தினம் சித்திரா பௌர்ணமி விழாவை "சித்தர் பெருவிழா" என்றே நடத்துவார்கள். இதையட்டி நந்தி எம்பெருமானுக்கும், கருவூராருக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அன்னதானமும் செய்வார்கள். இதில் பங்கேற்றால் சித்தர் பெருமான் கருவூராரின் அருளை பெறலாம்.

சித்தர்கள் பெரும்பாலும் ஏழை எளியவர்களின் பசியை போக்க அன்னதானம் செய்யுங்கள் என்பதையே வலியுறுத்தி உள்ளனர். எனவே முடிந்தால் சித்திரா பௌர்ணமி அன்று அன்னதானம் செய்யுங்கள். இல்லையெனில் எங்காவது அன்னதானத்துக்கு உதவி செய்யுங்கள். இதைக் கருத்தில் கொண்டே 24 மணி நேரமும் இலங்கையில் சித்தர்கள் வாசம் செய்யும் வேலோடு மலையில் திருப்பணி செம்மல் தியாகராஜா சந்திரா

# சித்தர்கள் பார்வையில் சித்திரா பௌர்ணமி!

குடும்பத்தினர் எப்போது யார் வந்தாலும் அன்னதானம் கொடுக்கிறார்கள்.

சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு சதுரகிரியில் கணக்கில் அடங்காத சித்தர்களை தரிசனம் செய்ய முடியும். குறிப்பாக கோரக்கர் சித்தரை நினைத்து தியானம் செய்தால் நிச்சயமாக அவரது தரிசனத்தை சதுரகிரியில் பெற முடியும். சதுரகிரியில் சித்தர்களின் முக்கிய ஆசியாக நமக்கு நல்ல உடல்நலம் கிடைக்கும். 16 வகை பேறுகளில் ஒன்று நோயின்மை. சித்திரா பௌர்ணமி வழிபாட்டுக்கும் நோயின்மைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக சித்தர்கள் கண்டுபிடித்து கூறி உள்ளனர்.

எனவே எந்த அளவுக்கு நாம் முழு மனதுடன் சித்தர்களை வழிபடுகிறோமோ அந்த அளவுக்கு நன்மைகள் கிடைக்கும். இலங்கையில் வேலோடு மலையில் போகர் பெருமான் பூஜித்த வேலுக்கு பின்புறம் 18 சித்தர்களின் சன்னதி உள்ளது. அந்த பகுதியில் பௌர்ணமி தினம் அமர்ந்து தியானம் செய்தாலே போதும், சித்தர்கள் உங்களுக்குள் ஊடுருவுவார்கள்.

அதுபோல திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரர் ஆலயத்திலும் கிரிவலத்தின்போது சித்தர்களின் அருளை பெறலாம்.திருச்செங்கோடுமலையானது ஓங்கார வடிவில் அமைந்தது. எனவே அங்கு சித்தர்கள் அருள் அதற்கேற்ப கிடைக்கும்.

நாகை மாவட்டம் எட்டுக்குடி முருகன் கோவிலில் பதினெண் சித்தர்களில் ஒருவரான வால்மீகி சித்தர் அடங்கியுள்ளார். சித்திரா பௌர்ணமி தினத்தன்று சிறப்பு பூஜைகள் நடைபெறும். அதில் பங்கேற்றால் திருமண பாக்கியம் கிடைக்கும் என்கிறார்கள்.

ஆலயங்களில் மட்டுமின்றி சித்திரா பௌர்ணமி தினம் ஜீவ சமாதிகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறும். உங்களுக்கு அருகில் உள்ள ஏதாவது ஒரு சித்தரின் ஜீவ சமாதிக்கு சென்று வழிபாடு செய்தால் சித்ரா பௌர்ணமி வழிபாட்டுக்கு உரிய அனைத்து பலன்களையும் நிச்சயம் பெற முடியும்.

சிங்கம்புணரியில் புகழ்பெற்ற முத்து வடுகநாதர் ஜீவ சமாதி அமைந்துள்ளது. சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு அந்த ஜீவ சமாதி தலத்தில் சித்தரின் திருவுருவச் சிலையைத் தேரில் வைத்து நகர்வலமாக எடுத்து செல்வார்கள். அப்போது சித்தரை வழிபட்டால் நாம் கேட்டது எல்லாம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சித்தர்களை வழிபடச் செல்லும் முன்பு சித்திரா பௌர்ணமி அன்று காலை வீட்டில் குளித்து முடித்து விட்டு உங்களது குல தெய்வம், இஷ்ட தெய்வத்தை வணங்குங்கள். முடிந்தவர்கள் சக்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து வழிபடுவது நல்லது. மாலையில் சந்திரனை பார்த்து விட்டு ஜீவ சமாதிக்கு சென்று வழிபடுங்கள் அல்லது சித்தர்களை நினைத்தப்படி கிரிவலம் வாருங்கள்.

உங்களது தேடல் உண்மையாக இருந்தால் நிச்சயம் உங்களுக்கு அவர்கள் ஏதோ வடிவத்தில் தரிசனம் தந்து உணர்த்துவார்கள்.

# மறைந்த தாயாரை நினைந்து வழிபாட சித்திரா பௌர்ணமி!

**(இன்று (12) சித்திரா பௌர்ணமி ஆகும். இன்றைய நாளில் தாயை இழந்தவர்கள் அவரை நினைத்து விரதமிருந்து வழிபட்டு ஆலயங்களில் தர்ப்பனம் கொடுப்பார்கள்.)**

ஒவ்வொரு மாத பௌர்ணமிக்கும் ஒவ்வொரு விஷேட விரதம் வருவது போல் சித்திரை மாத பௌர்ணமியும் சிறப்புப் பொருந்திய சித்திரா பௌர்ணமியாகத் திகழ்கின்றது.

சித்திரை மாத நிறை நாள் சிறந்த தாகையால் சித்திரா பூரணை என்க என்று சிலப்பதிகார உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இந்திர விழாவென்று இவ்விழா தனிச்சிறப்புப் பெறுகின்றது.

முதன்மை பெற்று விளங்கும் தமிழ் வருடச் சித்திரை மாதத்திலே தான் பிரம்மதேவன் பிரபஞ்சத்தைப் படைத்தான் என்று கூறப்படுகின்றது.

சித்திரை மாதத்தில் சித்திரா பௌர்ணமியோடு சித்திரை நட்ஷத்திரமும் சேர்ந்து வருவது மிகவும் சிறப்புடையது. சில நாள்களில் சித்திரை நட்ஷத்திரம் ஒரு நாள் முந்தியும் அல்லது ஒரு நாள் பிந்தியும் வருவதுண்டு.

அவ்வேளைகளில் சித்திரா பௌர்ணமியன்றுமறைந்ததாயாரைநினைத்து விரதம் அனுஷ்டித்து தர்ப்பணம் தானம் செய்தல் வேண்டும்.

பூமியின் ஒரு பக்கம் சூரியனும் மறுபக்கம் சந்திரனும் வருவதே பௌர்ணமி எனப்படும். சூரியனைத் தந்தையென்றும் சந்திரனைத் தாய் என்றும் சோதிட நூலோர் நோக்குவர். அதன் படி இயற்கை எய்திய மாதாவுக்கு உரிய விரதமாக சித்திரா பௌர்ணமி விளங்குகின்றது.



சித்திரா பௌர்ணமி, சித்திரைப் பருவம் சித்திரா பூரணை என வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாத பௌர்ணமிக்கும் மாதாவை நினைத்து வழிபட முடியாதவர்கள் வருடத்தில் ஒரு முறை வருகின்ற சித்திரா பௌர்ணமி விரதத்தை கட்டாயமாகப் பிடிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.

சித்திரா பௌர்ணமியன்று தான் அயோத்தியில் இராமபிரானுக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. பிரபஞ்சமே தந்தையும் தாயும் என்பதை பிள்ளையார், சிவன், உமை இருவரையும் சுற்றி வந்து மாங்கனி பெற்ற கதை மூலம் அறிகின்றோம்.

இதனால்தான்'தாயிற்சிறந்தகோவிலுமில்லை' என ஆன்றோர் கூறினர். அன்னை பராசக்தியே தாய் என எண்ணி சித்திரா பௌர்ணமி விரதம் பிடிப்பது உத்தமம். 'துணையும் தொழும் தெய்வமும் பெற்ற தாயும்' என்ற பாடலில் ஈற்றில் 'திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே' என்று அபிராமி அந்தாதியில் அபிராமிப்பட்டர் அன்னையைத் துதித்துப் பாடுகின்றார்.

புறவடிவமாக விளங்குகின்ற எம்மை ஈன்றெடுத்த தாயை வழிபட்டால் உலக மாதாவாகிய பராசக்தியை வழிபட்ட பலன் கிடைக்கும்.

சகல ஜீவராசிகளுக்கும் உண்மையான நிரந்தரமான தாயும் தந்தையும் பரம் பொருளாகிய சிவனும் சக்தியுமே இதனை விளக்கும் வடிவமே அர்த்த நாரீஸ்வர வடிவம்.

எமக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். அதில் முதல் ஆறு மாதமும் உத்தராயண காலமாகும். இப்பகல் பொழுதில் 15 நாளிகை முதல் 20 நாளிகை வரையுள்ள ஐந்து நாளிகை நேரமே சித்திரை மாதமாக வருகின்றது.

இந்த மத்தியான வேளையில் பௌர்ணமி சேர்ந்து சித்திரா பூரணையாக விஷேட காலமாக வருவதால் தாயை நினைத்து தீர்த்தமாடி விரதம் பிடித்து பிதிர்க்கடன் செய்வது அவர்களுடைய சந்ததியை விருத்தியடையச் செய்யும்.

சித்திரா பௌர்ணமி நாளை ஞான சம்பந்தர் அட்டமி நாள் என பூம்பாவைப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். பிரகஸ்பதியாகிய வியாழனின் அறிவுரைப்படி இந்திரன் தல யாத்திரை செய்து கொண்டு மதுரையை அடைந்த வேளை அங்கு ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டு தனது பாவம் குறைவதையுணர்ந்து சிவலிங்க பூஜை செய்ய குளத்திற்குச் சென்ற பொழுது அவ்விடத்தில் பொற்றாமரை மலர்ந்திருப்பதைக் கண்டு அதிசயித்து பொற்றாமரை மலரால் லிங்கத்தைப் பூஜை செய்த நாள் சித்திரா பௌர்ணமி எனக் கூறுவர்.

இந்தப் புனித தினமான சித்திரா பௌர்ணமியில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மறைந்த தாயாரையும் எல்லாம் வல்ல தாயாக விளங்கும் பராசக்தியையும் வழிபட்டு அருளும் ஆசியும் பெற்று வாழ்வோமாக.

# புத்த பெருமான் ஞானம் பெற்றதை எடுத்தியம்பும் வெசாக் பண்டிகை!



நடராஜன் ஹரன்



உலகில் வாழும் பௌத்தர்கலுக்கும், இந்துக்களுக்கும் மிகவும் சிறப்பு வாய்த்த புனிதமான நாளாக போற்றப் பட்டு வருகின்ற பொஷன் பண்டிகை இந்துக்களின் கலியுக வரதனாம் முருகப் பெருமானுக்கு உரித்தான சிறப்பு வாய்த்த வைகாசி விசாகமும் இவ் வாரத்தில் அனுஷ்டிக்கப்படுவது மேன்மையான பலனைத் தரக்கூடியதாகும்.

உலகின் துன்பங்களுக் கொல்லாம் அடிப்படைக் காரணம் ஆசைதான் என்ற உன்னத தத்துவத்தை உலகுக்குப் போதித்தவர் புத்தபெருமான் அவரது போதனைகளில் அஹிம்சை, ஜீவ காருண்யம், அன்பு, ஒழுக்க விழுமியம் போன்ற நற்பண்புகளும் பௌத்த மத கோட்பாடுகளுக்குள் அடங்கியுள்ளன.

பௌத்த மக்களின் புனித வெசாக் பண்டிகை ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் கொண்டாடப்படுகின்றது.

இந்துக்களுக்கும் இன்றைய தினம் மிகவும் புனிதமான முருகனுக் கடவுளுக்கு உரிய வைகாசி விசாகமாக இந்துக்களால் அனுஸ்டிக்கப்படுகின்றது.

வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திர நன்னாள் முருகப் பெருமானின் அவதார தினமென போற்றப்படுகின்றது. விசாக நன்னாளில் அவதரித்ததால் முருகக் கடவுளுக்கு விசாக வேந்தன் என்று ஒரு அற்புத பெயரும் உண்டு.

இவற்றை வைத்து பார்க்கும் போது இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் ஒரு தனித்துவமான நன்னாளாக இந்த நாள் விளங்கி வருவதுடன் இரு இனங்களின் சமய சகவாழ்வு, சகோதரத்துவம் பேனப்பட்டு வருகின்றமை வரலாற்று ரீதியான உண்மையாகும்.

புத்த பெருமான் நேபாளத்தின் லும்பினியில் கி.மு. 560 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுத்தோதன மன்னனுக்கு மகனாகப் பிறந்தார் இவருக்கு சித்தாத்தர் எனும் இளமைப் பெயரும் உண்டு.

இளமைக் காலத்தில் சுக போகங்களை அனுபவிக்க வேண்டிய தனது 29 ஆவது வயதில் வாழ்க்கையின் முக்கிய மூன்று தத்துவமான மூப்பு, பிணி, மரணம் ஆகியவற்றை நேரில் கண்டு மானிட வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்ந்துடன், நிலையான மெஞ்ஞானத்தைத் தேடி முற்றும் துறந்து துறவியாக மாறி புத்தர் என்ற பெயரை பெற்றார் இளவரசர் சித்தாத்தர்.

தான் மரணிக்கும் வரை நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பொருளுக்கும், சுகத்திற்கும் போராடும் மாந்தர்களுக்கு வாழ்வின் உண்மையான அர்த்தம்களைப் போதித்து வந்தவர் புத்தபிரான்.

வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்கு காரணம் மெப்பொருள் பற்றிய அறிவின்மையே நிரந்தரமற்ற சிற்றின்பம் மீதுள்ள பற்றே அறியாமை உருவாக வழியமைக்கின்றது.

தியான வளிமுறை ஊடாக மன அமைதியையும் தெளிவையும் பெறுவதன் மூலம் அறியாமை என்னும் இருள் நீங்கி மகிழ்சியான வாழ்க்கை வாழ முடியும் என்பதையே கௌதம புத்தரின் போதனை எடுத்தியம்புகின்றது.

இந்த மாதத்தில் கொண்டாடப்படும் வெசாக் பண்டிகை நாடு தழுவிய ரீதியில் ஒரு மாதகாலம் கொண்டாடப்படுவது குறிபிடத்தக்கதாகும்.

விசேடத்துவம் மிக்க புனிதம் நிரம்பிய நன் நாளில் நாம் கேளிக்கைகளைத் தவிர்த்து அமைதி, தியானம், வழிபாடு ஆகிய வற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது மானிட வாழ்வில் மேலான வாழ்வைத் தருவது சிறப்பாகும்.

வெசாக் தினம் என்றவுடன் எம் எல்லோருக்கும் நினைவில் வருவது மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தோரணங்களும், பந்தல்கள், எண்ணெய் விளக்குகள் என்று எளிமையாக அமைந்த எண்கோணக் கூடுகள் முதல் வியக்க வைக்கும் நுட்பமான கலை நயம் நிறைந்த வியத்தகு பிரமாண்ட படைப்புக்களும் எம்மை மகிழ்விக்கும்.

இந்த அலங்கரிக்கப்பட்ட மின் விளக்குகளின் ஊடாக, புத்த பெருமான் அவதரித்து இந்த உலகில் அடைந்த துன்பங்களில் இருந்து மக்களை காக்கும் வரலாற்று ஆவணங்கள் சித்தரிக்கப்பட்டு இளம் தலைமுறையினருக்கு விளக்கிக் கூறுவது சிறப்பம்சமாகும்.

இந்த ஒரு வார காலத்தில் இலங்கையின் பௌத்த சமய வழிபாட்டுத் தளம் அமையப் பெற்றுள்ள ஒவ்வொரு இடத்திலும் விசேட ஆராதனையுடன் நற்போதனைகளும் இடப் பெற்று வருவதுடன் ஏராளமான பௌத்தர்கள் கலந்து கொள்வது சிறப்பம்சமாகும்.

இந்தச் சமய நிகழ்வுடன் இணைந்ததாக ஏழை எழியவர்களுக்கு உதவும் தான தர்மங்களில் தான சாலைகளை அமைத்து மக்களுக்கு உணவுகளும் பானங்களும் வழங்குவர்.

மனிதர்களுள் மாணிக்கமாகத் திகழ குரோதமற்ற பண்பை மேலோங்கச் செய்யும் இவ்வாறான செயற்பாடுகள் வெசாக் தினத்தின் சிறப்பாகும்.

புத்தர் பெருமான் புண்ணியம் செய்வதே சிறந்த அறம் என்கின்றார். புண்ணியங்களைச் செய்பவர் தாம் செய்யும் புண்ணியங்களை, முதிர்ச்சியடையாதவரையில் துன்பங்களை அனுபவிக்கின்றனர். ஆனால் புண்ணியங்கள் முதிர்ந்து பலன்தரும் போது இன்பங்களைக் காண்கின்றனர்.

புண்ணியங்களை பற்றி அற்பமாகா நினைக்காதீர்கள். நீர் துளித்துளியாக கொட்டினாலும் நீர்க் குடம் நிறைந்து விடுகின்றது. எனவே தீமைகளைச் செய்யாதீர்கள் என புத்தபிரான் போதித்துள்ளார்.

யுகம் தோறும் உலகை உய்விக்க மகான்களும் ஞானிகளும் மனித விடிவில் தோன்றுவது ஆன்மிக வாதிகளின் நிதர்சனமான கருத்தாகும்.

கௌதம புத்தரின் ஞானக் கருத்துக்கள் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளைக் கடந்தும் ஒளி விட்டுக் கொண்டே இருக்கின்றன. இதனை உணர்ந்து அவர்களது போதனைகளை உள்ளுணர்வோடு கொண்டு பாவ வினைகளை அகற்றி புண்ணியத்தைச் சேர்த்து சுபீட்சமாக வாழ்வோமாக.

# இன்றைய ராசி பலன்கள் - 12.05.2025




இன்று நீங்கள் தன்னிச்சையாகவும் நம்பிக்கையுடனும் செயல்படுவீர்கள். இதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு கிடைக்கும் புதிய வாய்ப்பு களில் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் இன்று சாத்தியம். இன்று நீங்கள் பணிகளை விரைவாகவும் திறமையாகவும் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நெருக்கம் அதிகரிக்கும். இது திருப்தி அளிக்கும். இதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியம்.

நிதிநிலைமை சிறப்பாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண பீர்கள்.




இன்று எல்லா செயல்களிலும் பொறுமை கடைபிடிக்க வேண்டும். இன்று வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளதால் பிறருடன் பேசும் போது கவனம் தேவை. முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணி களை மேற்கொள்ளும்போது நீங்கள் மிகவும் பொறுமை காக்க வேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் நட்போடு அணுகுவதன் மூலம் உங்கள் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக இன்று பண இழப்பு காணப்படுகின்றது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். கையாள்வதற்கு கடினமான கட்டுப் பாடற்ற சூழ்நிலை காணப்படும்.இதனை சமாளித்து உறுதியுடன் அடுத்த கட் டத்திற்கு நீங்கள் செல்ல உறுதி செய்து கொள்ளுங்கள்.

சரியான நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் காணப்படும். இதனால் பணிகள் நிலுவை யில் இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் இணைந்து நேரம் செலவழிப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரும் ஒன்றாக பொழுதுபோக்கு நிகழ்சிகளில் கலந்து கொள்வது சிறந்தது.

பணத்தை கையாளும்போது அஜாக்கிரதையாக மற்றும் கவனக் குறைவாக இருந்தால் இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வெற்றிகரமான பலன்கள் காணப்படும். இதனால் உங்கள் பணி களை எளிதாக ஆற்ற இயலும். கவனம் மற்றும் உறுதியுடன் செயல்பட்டால் உங்கள் வளர்ச்சி மேம்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நீங்கள் தன்னிச்சையாகவும் திறமையுடனும் செயலாற்றுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யோடு உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சேமிப்பு அதிகரிக்கும். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் மன வலிமை காரணமாக நீங்கள் ஆரோக் கியமாக இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியை மேம்படுத் தும் வகையில் சாதகமான பலன்கள் காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் பணிகளை நேர்மை யுடன் ஆற்றுவீர்கள். இதனால் உங்கள் திறமை மேம் படும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர் கள். இந்த அணுகுமுறை காரணமாக நல்லிணக்கம் மேம்படும்.

பூர்வீகச் சொத்து மூலமாக இன்று பண வரவு காணப்படுகின்றது. கடன் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது. கையிலுள்ள பணத்தை கொண்டு அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்றுஎல்லாசெயல்களிலும்யதார்த்த மான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்கள் இலக்குகளை முடிப் பதில் சில கடினங்கள் காணப்படும். மனதை அமைதியாக வைத்து கவன முடன் செயற்பட்டால் நன்மை விளையும்.

நிலுவையில் உள்ள பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கு முறைபடுத்தி செயலாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் ஏற்படும் சஞ்சலமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் நல்லிணக்கம் குறையும். நல்லுறவை பராமரிக்க உணர்ச்சிகளை கட்டுபடுத்தி நட்புடன் உணர்வுகளைப் பகிர வேண்டும்.

நிதிநிலைமையில் காணப்படும் ஏற்ற இறக்கம் மன-துக்குக் கவலை அளிக்கும்.




இன்றுவிருப்பமானபலன்கள்கிடைக்க சாதகமான நாள் அல்ல. என்றாலும் உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத் தும் புதிய திறமைகளை கற்கலாம். நண்பர்கள் உங்கள் நம்பிக்கைக்கு புறம்பாக நடக்கலாம் என்பதால் அவர்க ளிடம் கவனமாக இருக்கவும்.

பணிகள் சலிப்பைத் தருவதாக இருக்கும். இது உங்களுக்கு சோர்வை அளிக்கும். உங்கள் பணி களை குறித்தநேரத்தில் முடிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

உங்கள்துணையிடம்அகந்தைப்போக்கைவெளிபடுத்து வீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். அமைதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்களின் கவனக் குறைவு காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களிடம் மகிழ்ச்சியான எண்ணங்களும் செயல்களும் காணப் படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் அமைதி காணலாம்.

புதியவேலைவாய்ப்புகள்உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். நீங்கள் உங்கள் பணிகளை இனிமையான சூழ்நிலையில் மகிழ்ச்சியாக செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான உணர்வு களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரும் ஒரு வரையொருவர்நன்கு புரிந்து கொள்ள இயலும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். உங்கள் நிதியை வளமாக்க இன்று நீங்கள் சேமிக்கும் திட்டங் களில் பங்கு கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் மனதைரியம் காரணமாக இது சாத்தியமாகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.05.2025




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டியிருக்கும். இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது.

அதிகப் பணிகள் காரணமாக கவலை ஏற்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு அதன்படி ஆற்றவும்.

நகைச்சுவை பேச்சின் மூலம் நீங்கள் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உருவாக்க இயலும். உங்கள் கருத்துகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் அனுசரணை காணப்படும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று அதிக செலவுகள் காணப்படும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும்.




இன்று மந்தமான நிலை காணப்படும். உங்கள் செயல்களில் விழிப்புணர்வு தேவை. இன்று நன்மை காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளை கையாளும்போது சவால்களை சந்திக்க நேரும்.

மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். தேவையற்ற வாக்குவாதங்கள் எழ வாய்ப்புள்ளது. எனவே இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.




உங்களுக்கு கவலை அளிக்கும் வகையிலான சூழ்நிலைகள் இன்று காணப்படும். உணர்ச்சிக் கட்டுப்பாட்டை பராமரித்தலும் சமநிலையோடு இருத்தலும் நல்ல பலனளிக்கும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு சென்று ஓய்வெடுங்கள்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியில் சிறப்பான பலன்களைப் பெற சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும்.

உங்களிடம் பதற்றமான மனநிலை காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு காணப்படும். உறவில் நல்லிணக்கம் ஏற்படுத்த நீங்கள் இந்த உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும்.




இன்று உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதற்கும் உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும் தேவையான உறுதி மற்றும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். வங்கியிருப்பை சிறப்பாக பராமரித்து திருப்தி அடைவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.



# சிக்குன்குனியா தொற்று தொடர்பில் அவதானம்

டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்துவதுடன், குறித்த நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு நீண்ட மற்றும் குறுகிய காலத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 18,749 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மழையுடனான வானிலையினால் டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, காலி, மாத்தளை, மட்டக்களப்பு, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயம் மிக்க மாவட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த சில மாதங்களாக நாட்டின் பல பகுதிகளில் சிக்குன்குனியா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அதனை சுத்தமாக வைத்திருப்பதுடன், நுளம்பு கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் உடல் முழுவதையும் மூடும் வகையிலான ஆடைகளை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குமட்டல் மற்றும் வாந்தி, தோலில் சிவப்பு புள்ளிகள் மற்றும் இரத்தப்போக்கு ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.